# வருடாந்த அறிக்கை 2016

LAKE
HOUSE

த அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்

# உள்ளடக்கம்


நோக்கு, இலக்கு விழுமியங்கள் 1

நிதிசார் கண்ணோட்டம் 3

தலைவரின் செய்தி 4

நிதிசார் மீள்நோக்கு 7

இடர் முகாமைத்துவம் 9

கூட்டுறவு ஆளுமை 10

பணிப்பாளர்களின் அறிக்கை 13

நிதிக்கூற்றுக்கள் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பு 15

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 16

கணக்காய்வு அவதானிப்புக்கள் மீதான தலைவரின் அபிப்பிராயங்கள் 29

மனித வளங்கள் 37

திரட்டிய பரவலான வருமானக்கூற்று 38

திரட்டிய நிதிசார் நிலைமை பற்றிய கூற்று 39

திரட்டிய நிதி ஓட்டக்கூற்று 40

திரட்டிய உரிமை மாற்றங்களின் கூற்று 41

நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள் 42

பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று 69

பத்து ஆண்டுகள் சுருக்கம் 70

பங்கு தகவல் 71

கூட்டுறவுத் தகவல் 72

# நோக்கு

இலங்கையில் மிக நம்பகமான மற்றும் ஆக்கபூர்வமான ஊடக சேவைகள் வழங்குநராகத் திகழ்கின்றது.

# இலக்கு

பிரதான செலுத்துநர் என்ற வகையில் தகவல்களைத் தெரிவிப்பதுடன், நாட்டில் மிக நம்பகமான மற்றும் உயர்தர ஊடக உற்பத்திகள்/ சேவைகளை மிக விருப்பத்துடன் வழங்குபவராக இந்த முன்னணி அச்சிடல் ஊடக நிறுவனம் மாற்றம் பெற்றுள்ளது. கலை தொழில்நுட்ப நிலையுடன் இணைந்து பரவலாக செய்திகளைச் சேகரிப்பதிலும் சந்தைப்படுத்தலிலும் கலை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேலான செயற்பாடு மற்றும் அடையாள பெறுமானத்தைத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலமும் இதனை நாம் அடையவுள்ளோம். எமது வியாபாரத்துறையில் பெரும்பாலும் தேசிய நலனை வைத்து எமது சந்தைத் தலைமைத்துவம் மற்றும் இலாபத் தன்மையை நிலை நிறுத்துவதற்கும் தயக்கமின்றி ஊக்கத்துடனும் தெளிவாகவும் அறிந்து கொள்வதற்கும் நாம் ஊக்கம் பெற்றுள்ளோம்.

# விழுமியங்கள்

- முதலில் தேசிய நலனை நாம் வைத்திருப்போம்
- எமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை நாம் வளம்பெறச் செய்வோம்
- ஒரே குழுவாக நாம் கருமமாற்றுவோம்.

# நிதிசார் கண்ணோட்டம்

| நிதிசார் செயற்பாட்டு கண்ணோட்டங்கள் மற்றும் விகிதங்கள் | | 2016 | 2015 மீள் குறிப்பிடப் பட்ட | மாற்றம் | மாற்றம் |
|---|---|---|---|---|---|
| மொத்த புரள்வு | ரூபா '000 | **3,050,156** | 2,954,438 | 95,718 | 3% |
| VRS வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | ரூபா '000 | **192,521** | 16,204 | 176,317 | 1088% |
| VRS செலவு | ரூபா '000 | **163,513** | - | - | - |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | ரூபா '000 | **29,008** | 16,204 | 12,804 | 79% |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு பின்னர் இலாபம் | ரூபா '000 | **20,608** | 39,938 | (19,330) | -48% |
| ஓர் ஊழியருக்குரிய மொத்த புரள்வு | ரூபா '000 | **2,005** | 1,695 | 310 | 18% |
| ஓர் ஊழியருக்குரிய வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | ரூபா '000 | **19** | 9 | 10 | 111% |
| தேசிய பொருளாதாரத்துக்குரிய வருமானம் | ரூபா '000 | **399** | 415 | (16) | -4% |
| முதலீடுகளிலிருந்து வருமானம் | ரூபா '000 | **13,744** | 14,414 | (670) | -5% |
| நிதி செலவுகள் | ரூபா '000 | **49,938** | 58,502 | (8,564) | -15% |
| ஒரு பங்குக்குரிய வருமானம் | ரூபா | **6** | 11 | (5) | -45% |
| தொழிற்பட்ட மூலதனம் மீது இலாபம் | | **4%** | 8% | -4% | -50% |

**நிதிசார் நிலைமை கண்ணோட்டம் மற்றும் விகிதங்கள்** **(ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | ரூபா '000 | **1,920,908** | 1,698,861 | 222,047 | 13% |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | ரூபா '000 | **358,159** | 252,535 | 105,624 | 42% |
| நீண்ட தவணை நிதிசார் சொத்துக்கள் | ரூபா '000 | **180,056** | 179,941 | 115 | 0% |
| மொத்த சமநிலை | ரூபா '000 | **542,388** | 517,284 | 25,104 | 5% |
| வழங்கலில் உள்ள பங்குகளின் எண்ணிக்கை | '000 | **3,484** | 3,484 | - | 0% |
| ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் | ரூபா | **156** | 148 | 8 | 5% |
| நடைமுறை விகிதம் | தடவைகள் | **2.1** | 2.0 | 0 | 5% |
| துரித விகிதம் | தடவைகள் | **1.6** | 1.6 | 0 | 0% |

# தலைவரின் செய்தி

***அன்புள்ள பங்குதாரர்களுக்கு,***

2016 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருமாந்த அறிக்கை மற்றும் நிதிசார் கூற்றுக்களை உங்களுக்குச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

## மெக்ரோ பொருளாதார சுற்றாடல்

நீண்ட கால நிச்சயமற்ற காலப்பகுதியைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் தேசிய ஒருமைப்பாட்டு அரசினால் சேர்க்கப்பட்ட சரியான நடவடிக்கைகளின் பிரதிபலனாக உறுதிப்பாட்டின் அறிகுறிகளைக் காண்பிக்கத் தொடங்கியது.

அசாத்தியமான காலநிலை மற்றும் மந்தமான உலகளாவிய பொருளாதாரம் இலங்கையின் உண்மையான விதிகளில் 2015ல் அடையப்பெற்ற 4.8% விட 2016இல் 4.4% வீதத்தில் சிறிது மெதுவாகவே வளர்ச்சியடையக் காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், இறுக்கமான பிஸ்கால் மற்றும் நாணய கொள்கைகளுக்கு மத்தியிலும் இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து காலாண்டுகளில் உறுதியான துரிதப்படுத்தப்பட்ட வளர்ச்சியை அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது. அதிகரிக்கப்பட்ட முதலீட்டுச் செலவினம், குறிப்பாக நிருமாணத்துறையில் கொள்கை சுற்றாடல் பிரதிபலனாக நுகர்வுச் செலவினம் மந்தமடைந்த பொழுது 2016இல் அதன் வளர்ச்சி ஈர்க்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதலாவது நான்கு மாதங்களில் குறைவாகக் காணப்பட்ட பண வீக்கம், அதன் பின்னர் 2016இல் வருடாந்த சராசரி 4% குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டின் சில மாதங்களில் அவதானிக்கப்பட்ட கூர்மையான பண வீக்க மட்டம், காலநிலை தொடர்பான இடையூறுகள் மற்றும் சர்வதேச பொருட்களின் விலைகள் உயர்வின் பாதகமான அழுத்தத்திற்குப் பாரிய காரணமாக இருந்துள்ளன. கம்பனி தொடர்பாக அதிகரித்து வருகின்ற தேவை அழுத்தம் உயர்ந்து வருகின்ற மட்டங்களில் கூட்டு பண வீக்கம் காரணமாகவே இருந்துள்ளன.

## கம்பனியின் செயற்பாடு

கம்பனி VRS சுயேட்சையான பதவி விலகல் திட்டம்) செலவு, வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலின் பின்னர் இலங்கை ரூபா 3 பில்லியன் மற்றும் இலங்கை ரூபா 20.6 மில்லியன் பெற்று மொத்தப் புரள்வு சாதனை படைத்துள்ளது. அச்சிடல், இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகம் ஊடாக கண்டிப்பான போட்டிக்கு மத்தியிலும் ஏஎன்சிஎல் குழுவினால் குறிப்பிடத்தக்க செயற்பாடாக இது இருந்துள்ளது. ஒக்டோபர் 05ஆம் திகதி மற்றும் 2016 நவம்பர் 22ஆம் திகதியன்றும் எமது உத்தியோகத்தர் குழாமிற்கு இரண்டு பதவி விலகல் ஓய்வூதியத் திட்டங்கள் (VRS) அறிவிக்கப்பட்டன. அவ்வாறே 177 ஆளணியினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர். அத்துடன் VRS செலவு இலங்கை ரூபா 163.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன. ஊழியர்களைக் குறைப்பதில் VRS திட்டத்தின் நன்மை அடுத்து வருகின்ற ஆண்டுகளில் கம்பனி செயற்பாடு தொடர்பாக சாத்தியமான அழுத்தத்தைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாம், தொடர்ந்து பெருமளவில், செய்தித்தாள், தகடுகள் மற்றும் இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் போன்ற கூட்டுப் பொட்கள் இறக்குமதியில் தங்கியிருக்கின்றோம். எமது நிலைமை உலகளாவிய விலை போக்கு மற்றும் நாணய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக அடிக்கடி சேதமடையக்கூடியதாக இருக்கின்றது. எமது பிரசுரங்களுக்கு அதிகரித்து வருகின்ற தேவைகளை வழங்குகின்ற பொழுது அதி உயர்ந்த தரம் மற்றும் வெளியீடு மட்டங்களில் அச்சிடல் இயந்திரங்களை நிருவகிப்பதற்கு கம்பனி தொடர்ந்து உயர் தரங்களை தொடர்ந்து வைத்திருக்கின்றது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், கம்பனி எமது மெக்னம் பிரஸ் நவீனமய தொழிற்பாட்டில் இலங்கை ரூபா 137 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

## பங்குதாரர்களின் இலாபம்

2016 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக ஒரு பங்குக்கு இலங்கை ரூபா 1.00 இறுதிப் பங்கிலாபமாக இலங்கை ரூபா 3.4 மில்லியன் தொகையை வழங்குவதற்குப் பிரேரித்துள்ளது.

## கூட்டுறவு சமூக பெறுப்பு

முன்னணி வாய்ந்த அச்சிடல் ஊடக கம்பனி என்ற வகையில் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை சிந்தனையில் கொண்டுள்ளோம். ஆகவே, இலங்கையின் பாரம்பரிய விழுமியங்களுக்கு

# தலைவரின் செய்தி



# தலைவரின் செய்தி

அமைவாக சமய, தேசிய மற்றும் கலாசார, பண்டிகை போன்வற்றுக்கு உதவி செய்வதற்கு நாம் உறுதியாகச் செயற்பட்டுள்ளோம். கம்பனி வழங்கியுள்ள தலைமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளில் சில:

- டி. ஆர். விஜேவர்தன ஞாபகார்த்த பேருரை
- வெசாக் அமாதஹர
- மிஹிந்தலை ஆலோக மின்னொளி பாய்ச்சுதல்
- இந்த ஆண்டின் ஒப்சேர்வர் மொபிட்டெல் பாடசாலை மாணவர் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்கள்
- சரசவிய திரைப்பட விழா
- செனஹி சியபத்த - சேதம் நிவாரணத் திட்டம்

## வருங்காலம்

நாம் எதிர்கால நன்மையில் நம்பிக்கை வைத்துள்ளோம். வெற்றிகரமான அறிகுறியுடன் நாம் 2016 முடிவடைந்த ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளோம். எமது எதிர்கால வளர்ச்சி மற்றும் புத்தாக்கங்களைத் தொடர்வதே எமது நோக்கமாகும். தரமான மற்றும் நம்பிக்கையுள்ள புதினப் பத்திரிகைகளை வழங்குவதன் மூலம் கம்பனி எமது சந்தை பங்கை அதிகரிக்கச் செய்வதை மையப்படுத்தி பணிகளைத் தொடர்ந்து ஆற்றவுள்ளது. எமது தரமான மற்றும் போட்டி விலையிடல் தேவைகளை எதிர்கொள்வதற்கு அச்சிடல் செலவுகளைக் குறைப்பதற்கும் சர்வதேச சந்தைகளில் புதிய மூலப்பொருட்கள் வழங்குநர்களை கண்டுபிடிப்பதற்கும் நாம் செலவு முகாமைத்துவ உபாயங்களை அமுல்படுத்தவுள்ளோம். மேலும் போட்டி நிலையை முகம்கொடுக்கும் வகையில் குறிப்பிட்ட வடிவமைப்பில் மற்றும் உள்ளடக்கத்தில் முதலீடுகளினூடாக எமது புதினப் பத்திரிகைகளுக்கு மேலும் பெறுமதி சேர்ப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கம்பனியை மேலும் வளர்ப்பதற்கான வழியை சீர் செய்து பொருளாதாரத்துக்கு ஊக்கமூட்டும் சீரான கொள்கைகளை உறுதிப்படுத்துகின்ற உறுதியான நடைமுறையிலுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடரும் என நாம் நம்புகின்றோம்.

## பாராட்டுரை

2017 ஜுலை 18ஆம் திகதி மாத்திரம் ஏஎன்சிஎல் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து எனக்கு முன்னர் பதவி வகித்து கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதி சிறந்த சாதனைகள் படைத்து ஏஎன்சிஎல் ஓட்டிச் செல்வதில் வழிகாட்டலும் தலைமையும் வழங்கியமைக்காக திரு காவன் ரத்நாயக்க அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கம்பனிக்குத் தமது பங்களிப்புகளைச் செய்தமைக்காக சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே வேளை வருங்காலத்தில் மேலும் அவர்களுடன் இணைந்து கருமமாற்ற, விரும்புகின்றேன். பணிப்பாளர் சபை சார்பாக ஏஎன்சிஎல் பணிப்பாளர் சபை சார்பாக நிறைவேற்றுக்குழு, எல்லா உத்தியோகத்தர் குழாம் எமது வியாபார பங்குதாரர்கள் மற்றும் நேர்மையான வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவத்துக் கொள்ள விரும்புகின்றேன்.



**கிரிசாந்த குரே**

தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்

## நிதிசார் அறிக்கையிடலும் சாதனைகளும்

தி அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் அதன் நிதிசார் அறிக்கையிடலில் மிகச் சிறந்த நடைமுறைகளைச் சேர்த்துள்ளதுடன், நிதிசார் அறிக்கையிடல் சுற்றாடலில் பூர்த்தி செய்யப்பட்ட புதிய அபிவிருத்திகளை வைத்திருக்கின்றது.

பக்கம் 38 - 68 வரையிலான நிதிசார் அறிக்கைகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) இணக்கப்பாட்டுடன், தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நிதிசார் கூற்றுக்களின் தெளிவான மற்றும் பரவலான புரிந்துணர்வுடன் பங்குதாரர்களுக்கு வழங்குவதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### நிதிசார் செயற்பாடு

**குழு நிதிசார் செயற்பாடு ஒரே பார்வையில்**

| விடயம் | 2016 இல. ரூபா மில்லியன் | 2015 இல. ரூபா மில்லியன் மீள் குறிப்பிடப்பட்ட | மாற்றம் இல. ரூபா மில்லியன் | மாற்றம் % | பிரதான காரணி |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 3,050 | 2,954 | 96 | 3% | விளம்பர வருமானத்தில் அதிகரிப்பு. |
| விற்பனைச் செலவு | 1,412 | 1,385 | 27 | 2% | மேற்பட்டவை தொடர்பான விற்ப னைச் செலவு அதிகரிப்பு. |
| ஏனைய வருமானம் | 122 | 124 | (2) | -2% | நானாவித வருமானத்தில் குறைவு. |
| நிருவாக செலவினங்கள் | 1,183 | 1,286 | (103) | -8% | விற்பனை தொடர்பான செலவுகளில் குறைவு. |
| விநியோக செலவினங்கள் | 334 | 333 | 1 | - | போக்குவரத்துச் செலவுகளில் அதிகரிப்பு. |
| VRS செலவினங்கள் | 164 | - | - | - | 2016இல் சுயேட்சையான இளைப்பாறுதல் திட்டம். |
| நிதி செலவினங்கள் | 50 | 59 | (9) | -15% | கடன் வட்டியில் குறைவு. |
| வரி செலவினங்கள் | 9 | 5 | 4 | 80% | வருமான வரியில் அதகிரிப்பு. |
| நியாய பெறுமதி சீராக்கல் | - | 29 | - | - | |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலின் பின்னர் இலாபம் | 21 | 40 | (19) | -48% | துணைக்கம்பனியின் வரிக்குப் பின்னர் இலாபத்தில் குறைவு. |

# நிதிசார் மீள்நோக்கு

## குருப் வருமானம்

குருப் 2016ஆம் ஆண்டுக்காக இலங்கை ரூபா 3050 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளது. 2015இல் இலங்கை ரூபா 2954 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் 3% அதிகரிப்பைக் காட்டுகின்றது.




## வருமான வளங்கள்

கம்பனியின் பாரிய வருமானவளமாகிய விளம்பரம் 2016ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 459 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. புதினப் பத்திரிகைத் தொழில்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவிய போதிலும் 22% சாதகமான வளர்ச்சியுடன் சாதனை படைத்துள்ளது. விநியோக வருமானம் இலங்கை ரூபா 95 மில்லியனால் குறைவடைந்துள்ளது. இது 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18% வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

| வருமான வளங்கள் | 2016<br>இல. ரூபா. மில்லியன் | 2015<br>இல. ரூபா மில்லியன்<br>மீள் குறிப்பிடப்பட்ட |
|---|---|---|
| விளம்பரம் | 2,547 | 2,088 |
| விநியோகம் | 440 | 535 |
| வர்த்தக அச்சிடல் | 51 | 313 |
| ஏனைய வருமானம் | 12 | 18 |
| மொத்தம் | **3,050** | **2,954** |

# இடர் முகாமைத்துவம்

திறமையான இடர் முகாமைத்துவம் மூலம் நம்பிக்கை வைத்திருக்கின்ற நிலையான வளர்ச்சி நிறுவனத்தின் தந்திரோபாயத்தில் வளர்ச்சி மற்றும் இடர்பாடும் ஒழுங்காக சமப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்கின்றது. ஏனென்சிஎல் இல் சகல தனிப்பட்டவர்கள் மற்றும் திணைக்களங்களையும் ஊடுருவிச் செல்கின்ற இடர் முகாமைத்துவக் கலாசாரத்தை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளதனால் தினசரி கம்பனியின் ஆற்றிச் செல்கின்ற பணிகள் போன்று நிருவகிக்கப்படுகின்ற உபாயங்கள் நம்பிக்கை கொள்ளச் செய்கின்ற உள்ளீட்டை நிருவகிக்கின்றது.

## கடன் இடர்பாடு

கடன் இடர்பாடு என்பது கம்பனியின் வாடிக்கையாளர்கள் உடன்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறியதனால் எழுகின்ற கணிசமான நிதி இழப்பையே குறிக்கின்றது. கம்பனி கடன் இடர்பாடு முகாமைத்துவ வலைப்பின்னலின் பிரதான காரணிகள் பின்வருமாறு:-

- ஒழுங்கான மீள் மதிப்பீட்டின் பின்னர் அனுபவமும் தராதரமும் பெற்ற உத்தியோகத்தர் குழாமினால் கடன் அங்கீகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.
- கடன் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகக் கடன்களுக்காக போதிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## செயற்பாட்டு இடர்பாடு

உள்ளக செயற்பாடு மக்கள் மற்றும் வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து முறைமைகள் போதாக்குறை அல்லது இதன் காரணமாக ஏற்படுகின்ற நேரடியான அல்லது மறைமுகமான இடர்பாடுகள் செயற்பாட்டு இடர்பாடு என அழைக்கப்படுகின்றது.

கம்பனியின் செயற்பாட்டு இடர்பாடு முகாமைத்துவ வலைப்பின்னலின் பிரதான காரணிகள் பின்வருமாறு:-

- முறைமை மற்றும் செயற்பாடு தவறுகின்ற போது செயற்பாடுகளுக்குரிய தடையைக் குறைப்பதற்காக தொடர்ச்சியான வியாபாரத் திட்டத்தை அமுல்படுத்துதல்.
- தெளிவான நன்கு அறியப்பட்டுள்ள தொழில் பொறுப்புக்கள் கடமையின் தனித்துவத்தை உறுதி செய்கின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டு முறைகளில் தவறுகளை இனம் காண்பதற்கு உள்ளக கணக்காய்வுப் பகுதியினால் நடைபெற்று வருகின்ற மதிப்பீடுகள் மேற்கொள்ளப்டுகின்றன.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் பொழுது செயற்பாட்டு இடர் பாட்டிலிருந்து எழுகின்ற முக்கியத்துவம் வாய்ந்த இழப்புக்கள் இடம்பெறவில்லை.

## தந்திரோபாய இடர்பாடு

கம்பனியின் வருங்கால வியாபாரத் திட்டங்களின் சாத்தியப்பாட்டிலிருந்து அத்துடன் போதாக்குறையான தந்திரோபாயங்களிலிருந்து எழுகின்ற கணிசமான இழப்புக்களையே தந்திரோபாய இடர்பாடு குறிக்கின்றது. கம்பனியின் தந்திரோபாய இடர்பாடு முகாமைத்துவ வலைபின்னலின் பிரதான காரணிகள் பின்வருமாறு:-

- கைத்தொழில் போக்குமுறை,பங்குதாரரின் தேவைகள் மற்றும் எமது பெறுமதி வாய்ந்த படைப்பு மாதிரிகள் என்பவற்றின் பலம் மற்றும் பலவீனத்தின் கவனத்தை ஈர்க்கின்ற சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட கூட்டுறவுத் திட்டத்தை அமுல்படுத்துதல்.
- முன் தீர்மானிக்கப்பட்ட செயற்பாட்டு சுட்டிக் காட்டப்பட்டவற்றிற்கு முரணாக ஒழுங்கான அடிப்படையில் கூட்டுறவு திட்ட செயற்பாட்டை மீள் நோக்குதல்.
- சந்தை பலம், மெக்ரோ பொருளாதார மாற்றங்கள் மற்றும் போட்டியாளர் செயற்பாடு போன்றவை உட்பட கைத்தொழில் போக்குகளை ஊக்கத்துடன் கண்காணித்தல்.

## சட்ட இடர் முகாமைத்துவம்

பொருத்தமான சட்டங்கள் விதிகள் மற்றும் நடத்தை ஒழுக்க விதிக்கோவைகள் மற்றும் நல்ல செயற்பாட்டு தரங்கள் நிதி இழப்பு அல்லது கம்பனியின் கீர்த்திக்கு ஏற்படுகின்ற உச்ச நிலை இணக்கப்பாடுகளுக்குப் புறம்பாக எழுகின்ற இடர்பாட்டையே சட்ட இணக்கப்பாடு குறிக்கின்றது. எல்லாப் பகுதிகளுக்கும் இணக்கப்பாடு பரிசீலனைகள் ஒழுங்கான அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. அத்துடன் இணங்கப்படாத சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம்

IT உடன் இணைந்த இடர்பாடு இடர் முகாமைத்துவ செயற்பாட்டில் மதிப்பிடப்படுகின்றன. கம்பனி தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவ வலைப்பின்னலின் பிரதான காரணிகள் பின்வருமாறு:

- அனுமதிப் பத்திரம் பெற்ற சொப்ட் வெயாரைப் பயன்படுத்துதல்
- வைரசுக்கு எதிரிடையான சொப்ட்வெயாரைப் பயன்படுத்துதல்
- இன்டர்நெட் பயன்பாட்டை மிக நெருக்கமாகக் கண்காணித்தல்
- பயர்வோல் சொப்ட்வெயாரைப் பயன்படுத்துதல்
- அஞ்சல் பாதுகாப்பு செயற்பாடுகள்

# கூட்டுறவு ஆளுமை

உறுதியான கூட்டுறவு ஆளுமை என்பது பங்குதாரர்களின் பெறுமதி மிக்க ஆக்கபூர்வ ஆர்வம் மற்றும் நீண்ட காலநிலைப்பாடு என்பவற்றையே குறிப்பிடுகின்றன. ஏஎன்சிஎல் வியாபார உயர் ஒழுக்க தரங்கள், பொறுப்புக்கள், மற்றும் அதன் பரவலான கொள்கை வலைப்பின்னலில் நிரூபிக்கப்பட்டுள்ள மாற்றத்திற்கு ஏற்ப செயற்படுகின்றதுடன், பொருத்தமான வரம்பு சமநிலையை எளிதாக்குகின்ற தெளிவான ஆளுமை கட்டமைப்பைக் கொண்டுள்ளது. ஏஎன்சிஎல் கூட்டுறவு ஆளுமை வலைப்பின்னல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 1. பணிப்பாளர் சபை

சபை, பொருத்தமான தேர்ச்சி சமநிலை, அனுபவம் சுயேட்சை மற்றும் அறிவு சார்ந்த அவர்களது பொறுப்புக்களைத் திறமையாக நிறைவேற்றக்கூடிய வகையில் பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கம்பனியின் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் பிரதான தீர்மானங்களை எடுக்கின்ற அங்கமாக திகழ்கின்றதுடன், ஒரு மாதத்திற்கு ஆகக்குறைந்தது மாதத்திற்கு இரண்டு தடவைகள் கூடுகின்றது.

| பணிப்பாளரின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | வருகைதந்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. காவன் ரத்நாயக்க தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் | 18 | 18 |
| கலாநிதி எமெரிக் மேன்லே பெர்னாண்டோ | 18 | 17 |
| திரு. சமன் வகஆரச்சி | 18 | 17 |
| திரு. சிரிமெவன் டயஸ் பியசேன | 18 | 14 |
| திரு. லக்ஷ்மன் ஹேவாபன்ன | 18 | 18 |

## 2. சபை குழுக்கள் மற்றும் அவர்களது உள்ளடக்கம்

சபை கீழ்க்காணும் குழுக்களை நிறுவியுள்ளது.

### 2.1 நிறைவேற்றுக்குழு (ExCo)

சபை திறமையாகத் தமது பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய வகையில் சபைக்கு பொருத்தமான மற்றும் உரிய காலத்தில் தகவலை வழங்குவதற்கு ExCo பொறுப்பாக விளங்குகின்றது.

**ExCo அங்கத்தவர்கள் பின்வருமாறு:**

- பொது முகாமையாளர்
- கம்பனி செயலாளர்
- சி.பி.பொ. முகாமையாளர் - அச்சிடல் மற்றும் பராமரிப்பு
- சி.பி.பொ. முகாமையாளர் - நிதி
- சி.பி.பொ. முகாமையாளர் - மனித மூலதனம்
- சி.பி.பொ. முகாமையாளர் - நிருவாகம்
- சி.பி.பொ. முகாமையாளர் - விளம்பரம்
- பிரதம நிருவாக அதிகாரி

### 2.2 கணக்காய்வுக்குழு

தொடர்ச்சியாக காலாண்டுக்கு ஒரு முறை கூடுகின்ற கணக்காய்வுக்குழு கம்பனியின் உறுதியான நிதி ஒழுங்குமுறையை உறுதி செய்வதற்கு உள்ளக கட்டுப்பாட்டு திறமைகளை மீள் நோக்குவதுடன், கண்காணிப்பு செய்து வருகின்றது. கணக்காய்வுக்குழு முன்கூட்டியே உள்ளக கணக்காய்வின் வருடாந்த கணக்காய்வு செயற்றிட்டத்தை அங்கீகரிப்பதுடன், அதன் நிறைவேற்றல் மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகின்றது. கணக்காய்வுக்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு

- தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்
- பணிப்பாளர் - நிதி
- பணிப்பாளர் - சட்டம்
- பணிப்பாளர் - செயற்பாடுகள்
- பொது முகாமையாளர்
- பி.பொ.முகா. - நிதி
- பிரதம உள்ளக கணக்காய்வாளர்
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி.
- பொதுசன ஊடக மற்றும் பாராளுமன்ற சீர்திருத்தங்க்ள அமைச்சசைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி.

### 2.3 கொள்வனவுக்குழு

ரூபா 1 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதிக்குத் திடமான மற்றும் சரியான கொள்வனவு நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு கொள்வனவுக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கொள்வனவுக்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு:

- தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்
- பணிப்பாளர் - நிதி
- பணிப்பாளர் - சட்டம்
- பொது முகாமையாளர்
- பி.பொ.மு. - நிருவாகம்
- பிர.பொ.மு. - நிதி
- பிரதம உள்ளக கணக்காய்வாளர்
- கொள்வனவுத் தலைவர்

### 2.4 குறைபாடு குழு

வேலையாட்களின் குறைபாடுகளுக்காகப் பரிகாரங்களை ஆலோசிப்பதற்கு குறைபாடு குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 72 குறைபாடுகள் கையாளப்பட்டுள்ளன. அவற்றில் 37 தீர்க்கப்பட்டுள்ளன. குறைபாடு குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு:

- பணிப்பாளர் - சட்டம்
- பணிப்பாளர் - செயற்பாடுகள்
- பொது முகாமையாளர்
- பிர.பொ.முகா. - மனித மூலதனம்

## 3. நிதிசார் அறிக்கையிடல் மற்றும் புலப்படுதல்

கம்பினியின் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியற் கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கணக்கியற் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

ஏனென்சிளல் அதன் நிதி அறிக்கையிடலில் மிகச் சிறந்த நடைமுறைகளைச் சேர்த்துள்ளதுடன் நிதிசார் அறிக்கையிடல் சுற்றாடலில் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய ஒழுங்கு முறைகளை வைத்திருக்கின்றது. பக்கங்கள் 38 - 68 வரையிலான நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சிறிய நடுத்தர நிறுவனத்திற்கான இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரங்களின் இணக்கப்பாட்டிற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

## 4. நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கான பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 15இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 5. உள்ளக கட்டுப்பாடுகள்

உள்ளக கட்டுப்பாடுகளின் முறைகள், தவறுகள், தவிர்க்கப்பட வேண்டியவை மற்றும் முறைகள் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதிலிருந்து எழுகின்ற இடர்பாடுகளை உள்ளடக்குதல், கடமைகளைத் தனியாகப் பிரித்தல், அதிகார மட்டங்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு போன்ற ஒழுங்கான நடைமுறைகளூடாக புத்தக செட்டை முறையாகப் பராமரித்தல் போன்றவற்றை வடிவமைத்துள்ளன. கம்பனி போதிய மற்றும் திறமையான உள்ளக கட்டுப்பாட்டுகளைக் கொண்டுள்ளது என்பதை உறுதி செய்வதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. தினசரி நிதிசார் மற்றும் நிதிசாராத செயற்பாடுகள் கம்பனியின் உள்ளக கணக்காய்வுப் பகுதியினால் ஒழுங்காக மீள் நோக்கப்படுகின்றன.

## 6. அரச நியதி கொடுப்பனவு தொடர்பான இணக்கப்பாடு

இன்று வரை எல்லா அறியப்பட்டுள்ள அரச நியதி கொடுப்பனவுகள் ஒழுங்கான முறையில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் ஊழியர்கள் சார்பாக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ளன.

## 7. பங்குதாரர்களுடனான உறவு முறை

நாம் எமது பங்குதாரர்களுடன் ஒழுங்கான தொடர்பு மற்றும் தொடர்பாடலை நிருவகித்து வருகின்றோம்.

# கூட்டுறவு ஆளுமை

## 8. கூட்டுறவு சமூக பொறுப்பு

சமூக மற்றும் சமுதாயம் தொடர்பாக கம்பனி பெருமளவில் அதன் பொறுப்புக்களை நன்கு விளங்கியுள்ளது.

## 9. ஊழியர் விவகாரங்களும் தொலைத்தொடர்பும்

ஊழியர்கள் முகாமைத்துவத்திற்கு கட்டுப்பாடற்ற முறையில் பிரவேசித்து தமது எண்ணங்களுக்கு குரல் கொடுப்பதற்கும் உடனுக்குடன் தமது துயரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் தொழில் பிளவுபட்ட நிலை எதுவும் இடம்பெறவில்லை.

## 10. சுற்றாடல் ரீதியான பாதுகாப்பு

சுற்றாடல் தொடர்பான பாதகமான தீங்குகளுக்குக் காரணமான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

## 11. அவதானத்துடன் செல்லல்

பணிப்பாளர்கள் தேவையான விசாரணைகள் மற்றும் வருங்காலத்திற்கான கம்பனி வரவு செலவுத் திட்டத்தின் மீள்நோக்குதல் உட்பட தேவைகள் எதிர்கால நலன்கள், இடர்பாடுகள், நிதி ஓட்டம் மற்றும் கடன் பெறுகை வசதிகள் எதிர்கால நலன்களுக்கான செயற்பாட்டு நிலைப்பாட்டையும் மீள் நோக்குகின்றனர்.

ஆகவே, நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பில் அவதானத்துடன் செல்லல் அடிப்படை சேர்க்கப்பட்டுள்ளது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்று மற்றும் ஐந்தொகை சகிதம் அத்திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

## 1. கம்பனி செயற்பாடுகள்

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் புதினப்பத்திரிகை மற்றும் பருவ வெளியீடுகளை அச்சிடல், பிரசுரித்தல் மற்றும் விநியோகித்தல் என்பனவாகும். மீளாய்வுக்குட்பட்ட நிதி ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் முக்கியமான மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்கள்

குரூப்பின் நிதிக்கூற்றுக்கள் இந்த வருடாந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 3. கணக்காய்வாளர்களின் அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர்கள் அறிக்கை வருடாந்த அறிக்கையின் 16ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. முக்கியமான கணக்கியற் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியற் கொள்கைகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

## 5. இந்த ஆண்டின் மீள்நோக்கு

நிதி ஆண்டில் கம்பனியின் செயற்பாடுகளின் மீள்நோக்கு மற்றும் அந்த செயற்பாடுகளின் பெறுபேறுகள் இந்த வருடாந்த அறிக்கையில் நிதி மீள் நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 6. வருமானம்

2016 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதியில் கம்பனி மொத்த வருமானம் ரூபா 3,050 மில்லியனைப் பெற்றுள்ளது.

## 7. இலாபம் மற்றும் ஒதுக்கங்கள் (ரூபா. மில்லியன்)

| | 2016 | 2015 மீள் குறிப்பிடப்பட்ட |
|---|---|---|
| VRS இற்கு முன்னர் இலாபம் | 193 | 16 |
| VRS செலவுகள் | 164 | - |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) | 29 | 16 |
| வரி விதிப்பு | (9) | (5) |
| நியாய பெறுமதி சீராக்கல் | 0 | 29 |
| வரிக்கு பின்னர் இலாபம்/ (நட்டம்) | 21 | 40 |
| பங்கிலாபங்கள் | - | - |
| முன்கொண்டு செல்லப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 21 | 40 |

## 8. வருமான ஒதுக்கங்கள்

2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கம்பனியின் வருமான ஒதுக்கங்கள் ரூபா 508 மில்லியன் ஆகும்.

## 9. சொத்து, பொறி மற்றும் உபகரணம்

2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் கம்பனி சொத்து, பொறி மற்றும் உபகரணம் மீதான மூலதனச் செலவினம் மற்றும் மூலதன நடைமுறை வேலை ரூபா 189 மில்லியன் ஆகும். இந்த ஆண்டுக்கான சொத்து, பொறி மற்றும் உபகரணத்தின் அசைவு நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 6இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. நன்கொடைகள்

இக்காலப்பகுதியில் கம்பனி தருமஸ்தாபனங் களுக்கு ரூபா 1.1 மில்லியனை வழங்கியுள்ளது.

## 11. ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள்

ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் ரூபா 155.68 ஆகும்.

## 12. பங்கு தகவல்

வருமானங்கள், பங்கிலாபங்கள் மற்றும் ஒரு பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் தொடர்பான தகவல் நிதிசார் கண்ணோட்டம் மற்றும் பத்து ஆண்டு சுருக்கக் கூற்றுக்களிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பங்குடைமை விநியோகம் பங்கு தகவல் அறிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

# பணிப்பாளர்களின் அறிக்கை

### 13. கணிசமான பங்குடைமை

இலங்கை அரசின் சார்பாக பொது நம்பிக்கையாளர் 87.5% பங்குகளை வைத்திருக்கின்றது.

### 14. பணிப்பாளர்கள்

2016 டிசம்பர் 31ஆம் திகதியன்று கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது பங்குடைமை பின்வருமாறு:

| | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. காவன் ரத்நாயக்க | இல்லை |
| திரு. சமன் வகஆரச்சி | இல்லை |
| கலாநிதி எமரிக் மேன்லி பெர்னாண்டோ | இல்லை |
| திரு. சரிமெவன் டயஸ் பியசேன | 1 |
| திரு. லக்ஷ்மன் ஹேவாபன்ன | 1 |

### 15. இக்காலப்பகுதியில் இராஜனாமா/ புதிய நியமனங்கள்

2016ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராஜனாமாக்கள்/ புதிய நியமனங்கள் இடம்பெறவில்லை.

### 16. பணிப்பாளர்களுக்கு கடன்கள்

கம்பனியின் பணிப்பாளர்களுக்குக் கடன்கள் வழங்கப்படவில்லை.

### 17. ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் பங்கு

2016 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியுடன் எந்தவொரு ஒப்பந்தம் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தத்திலும் பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமாக பங்கினைக் கொண்டிருக்கவில்லை.

### 18. பணிப்பாளர்களின் சம்பளம்

2016ஆம் ஆண்டுக்காக கம்பனியின் பணிப்பாளர்களின் சம்பளம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 23இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 19. பிந்திய ஐந்தொகை நிகழ்வுகள்

2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்குகளின் சீராக்கங்கள் செய்வதற்குத் தேவையான எந்தவொரு நிகழ்வும் இடம்பெறவில்லை.

### 20. அரச நியதி கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரை, அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கு சகல அரச நியதிகள் தொடர்பான கொடுப்பனவுகளும் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

### 21. அவதானத்துடன் செல்லுதல்

எதிர்கால தீர்க்கதரிசனத்துடன் போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என்பதையும் இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்ற போது கம்பனி ''அவதானத்தைச் செலுத்துதல்'' என்ற கருத்தினைக் கம்பனி பின்பற்றியுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை திருப்திப்படுத்துகின்றது.

### 22. சுற்றாடல் ரீதியான பாதுகாப்பு

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப கம்பனி சுற்றாடல் தொடர்பாகப் பாதகமான விளைவுகளுக்குக் காரணமான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை என்பதுடன், குறிப்பிட்ட சுற்றாடல் ஒழுங்கு விதிகளுக்குரிய இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளது எனவும் திருப்தியடைகின்றனர்.

### 23. கணக்காய்வாளர்கள்

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் சரத்து 154(3) க்கமைய இவ்வாண்டுக்கான கணக்குகள் கணக்காய் வாளர்கள் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்



**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**
கம்பனிச் செயலாளர்

# நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பு கீழ்க்கண்டவாறு விபரிக்கப்படுகின்றது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அவர்களது பொறுப்புக்களை கணக்காய்வாளர்களின் அறிக்கை விளக்குகின்றது.

நிதி ஆண்டின் முடிவுத் திகதியன்று கம்பனியின் உண்மையான நியாயமான விவகாரங்களின் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு நிதியாண்டினதும் நிதிக் கூற்றுக்களும் இந்த நிதியாண்டின் வருமானக் கூற்றுக்களும் தயாரிக்கப்பட வேண்டுமென 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் கேட்டுக் கொள்கின்றது. இந்தக் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற பொழுது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

1. உள்ளடங்கல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்றும் பிரயோகிக்கப்பட்டுள்ள பொருத்தமான கணக்கியற் கொள்கைகள் ஏதேனும் இணைக்கப்பட்ட பொருட்கள் வெளியேற்றம் விபரிக்கப்படுகின்றன.

2. பொருத்தமான சகல கணக்கியற் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துதல்.

3. சீராக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள் நியாயமானவையும் தீர்க்க தரிசனமுடையதென்பதையும் உறுதிப்படுத்துதல்.

4. கம்பனிச் சட்டத்திற்கமைவாக நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் நிதி நிலைமை நியாயமான சரியான தன்மையையும் போதுமான கணக்கியற் தரங்களைக் கொண்டுள்ளதையும் உறுதி செய்வதற்குப் பணிப்பாளர்கள் பொறுப்பாளிகளாவர். கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலஞ்சம் மற்றும் தவறுகளை விட்டொழிப்பதற்கும் கண்காணிப்பதனையும் கருத்திற் கொண்டு உள்ளக கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் உண்மையான உறுதிப்பாடுகளினூடாக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுவதற்கும் கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவர்கள் பொறுப்புடையோராவர்.

5. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் கணக்காய்வு அறிக்கையை வழங்குவதற்கும் அவர்களது கணக்காய்வு அறிவை வழங்கும் நோக்கில் பொருத்தமான முறையில் எந்தவொரு நடவடிக்கை எடுப்பதற்கும் பொருத்தமானதாகக் கருதுமிடத்து எந்தவொரு கண்காணிப்பைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

இந்தக் கூற்றிற்கு அமைவாகத் தமது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளனர் என்பதை பணிப்பாளர்கள் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

சகல நிதி அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தரவு மற்றும் பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர்களின் கூட்ட அறிக்கைகள் மற்றும் வருடாந்த அறிக்கையின் பக்கத்தில் தமது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்துள்ள நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் கணக்காய்வாளர்கள் பரிசீலனை செய்துள்ளனர் என்பதைக் கணக்காய்வாளர் நாயகம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

சபையின் கட்டளைப் பிரகாரம்

**தி. அஸோசியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்**
**குமுது எச். குணவர்தன இம்புலமுரே**
**கம்பனிச் செயலாளர்.**

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இல: எம்ஈடீ/சீ/ஏஎன்சீஎல்/1/16/எவ்ஏ-1 திகதி: 2017 நவம்பர் 27

தலைவர்,
வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனி

**வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனியின் 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனியினதும் (கம்பனி) அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவு மற்றும் 1973இன் 28ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனி (விசேட ஏற்பாடு) சட்டத்தின் 16ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பேரவையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பேரவையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின்

வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3)ஆம் மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழி கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானவையுமாக இருக்கின்றன என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழி கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயங்கள்

#### (அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கம்பனி

இந்த அறிக்கையின் 2.2.2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனியினது (கம்பனி) 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### (ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேட் நியூஸ்பேப்பர் கம்பனியினதும் (கம்பனி) அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான தோற்றத்தினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிரயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கம்பனியின் முழுமையான உரித்துடைய துணைக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் புரொபெடி டிவலொப்மெண்ட் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி ஆகியவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக

எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் இத்துணைக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதான பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முனைப்பழி அபிப்பிராயம் என்னால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி**

(i) மீளாய்வாண்டின் முன் ஆறு மாதங்கள் தொடர்பான முறையான முதன்மை பதிவுகள் மற்றும் துணை ஆவணங்கள் எனபன அப்பரிமாற்றங்களை சோதனையிடக்கூடியவாறு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொதுப்பேரேட்டு கணக்குகள் உரியவாறு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 782,574 கிரயமான ஆதனம், பொறி, உபகணரங்கள் எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் பிரிவு 17.19இல் விபரிக்கப்பட்டதன்படி அவற்றின் ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன.

(iii) மார்ச் 2016 தொடக்கம் இடை நிறுத்தப்பட்ட சஞ்சிகை அச்சிடல் ஊடாக நேர்ந்த ரூபா 4,374,033 ஒரு நட்டம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் புரொபடி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனி**

(i) முதன்மைப் பதிவுகளுக்கான முறையான பதிவேடுகள், துணை ஆவணங்கள் மற்றும் ரூபா 136,648 தொகையிடப்பட்ட நிர்வாக செலவுகளுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அக்கொடுக்கல் வாங்கல்களை சோதனை செய்யக்கூடியவாறு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தாய் கம்பனி சார்பாக செலுத்தப்பட்ட பராமரிப்புக் கட்டணம், நீர்ப்பட்டியல், மின்சாரப் பட்டியல் மற்றும் சம்பளங்கள் என்பவற்றின் திரண்ட தொகை ரூபா 661,649 இனை தாய்க் கம்பனியிடமிருந்து அறவீடு செய்யாது கம்பனியின் செலவாக பதியப்பட்டிருந்தது.

(iii) அறிக்கையிடும் திகதியின் பின்வரும் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்வை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிராத தாய்க் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 3,500,000 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) பிரிவு 4.4 இற்கமைவாக அதன் தன்மையினை கருத்திற் கொள்ளாது நடைமுறை சொத்தாக காட்டப்பட்டிருந்தது.

**வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி**

(i) 2016 ஜனவரி 01இல் உள்ளவாறு தாய்க் கம்பனியின் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,496,257 ஆன சென்மதி தொகையினை பதிவழிபதற்கு சபையினால் 2016 பெப்ரவரி 08இல் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இம்மீதி மீளாய்வாண்டு காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்களிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) பிரிவு 3.2(ஏ) இன் பிரகாரம் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) பிரிவு 10.21இன் பிரகாரம், 2016 பெப்ரவரியில் செலுத்தப்பட்ட 2015 திசெம்பர் மாதம் தொடர்பிலான சம்பளமும் கூலியும் ரூபா 120,746 ஆன தொகை பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எம்ஈஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணக்கப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| (அ) பிரிவு 4.4 | செய்தித்தாள் முகவர்கள், வழமையான விளம்பரதாரர்கள் மற்றும் ஏனையோரினால் வைப்புச் செய்யப்பட்ட திரண்ட தொகை ரூபா 171,159,000 இனை அதன் தன்மைக்கு மாறாக நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்த அதேவேளை, ஊழியர் கடன் நிலுவை ரூபா 130,597,000 தொகை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வேறாக வகைபடுத்தி காட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பிரிவு 7.8 (ஏ), (பி) மற்றும் (சீ) | பிற கடன்பட்டோர் மற்றும் பிற பெறுவனவுகள் மீதான ஐயக்கடன் ஏற்பாடுகள் முறையே ரூபா 6,015,000 மற்றும் ரூபா 4,527,000 தொகைளினது மாற்றங்களின் விளைவுகள் மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்களின் மீதான ஒரு நட்டப் பெறுமதி ரூபா 3,969,452 என்பன செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலில் உரியவாறு சீராக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பிரிவு 13.4 | பத்திரிகை அச்சுப்பொறிகள், வர்த்தக அச்சுப்பொறிகள், இயந்திரபாகங்கள் போன்ற பலவற்றின் இறுதி இருப்புக்களின் நிகர தேறத்தக்க பெறுமதியை கணிப்பீடு செய்யாது கிரயத்தில் ரூபா 327,509,000 ஆக கணிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) 17.19ஆம் பிரிவு | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 984,000,000 கிரயமான சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் கம்பனியால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றன. |
| (உ) 21.14ஆம் பிரிவு | கம்பனிக்கு எதிராக நிலுவையிலுள்ள 31 சட்ட வழக்குகள் தொடர்பான கடப்பாடுகளின் தன்மை, ஏதேனும் இடர்நேர் கொடுப்பனவுகளிற்காக எதிர்பார்க்கப்பட்ட தொகை மற்றும் காலம் பற்றிய சுருக்கக் குறிப்பொன்றை வெளிப்படுத்தியிருக்கவில்லை. |
| (ஊ) 28.41ஆம் பிரிவு | இப்பிரிவினால் வேண்டப்பட்டதன்படி தேவையான தகவல்களை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை. |

#### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016ஆம் ஆண்டிற்கு முன்னைய காலப்பகுதியில் ஊழியர்களின் தாமத வருக்கைக்காக ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகை ரூபா 12,338,537 ஐ மீளாய்வாண்டு காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சீராக்குவதற்குப் பதிலாக சம்பள கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் இத்தொகையால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னெடுக்கப்பட்ட பழைய பத்திரிகை விற்பனை மற்றும் அவற்றின் கிரயம் முறையே ரூபா 32,114,000 மற்றும் ரூபா 181,327,666 இனை நிதிக்கூற்றுக்களில் ரூபா 149,213,666 ஆன ஒரு நட்டமாக வேறுபடுத்திக்காட்டாது முறையே ஏனைய வருமானமாகவும், விற்பனை கிரயமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் ஓய்வூதிய கடப்பாடுகள் தொடர்பான பணிக்கொடை நம்பிக்கை நிதியில் இடம்பெற்ற திட்டச் சொத்துக்கள் மற்றும் திட்டப் பொறுப்புக்கள் முறையே ரூபா 264,877,000 மற்றும் ரூபா 285,688,000 ஆன தொகைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் கம்பனியின் விநியோக திணைக்களத்தினால் பேணப்படும் பதிவேட்டிற்கும் இடையில் ரூபா 8,513,049 பெறுமதியான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வருமானத்திற்கும் வர்த்தக அச்சிடல் திணைக்களத்தினால் பேணப்படும் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த வருமானத்திற்கும் இடையில் ரூபா 2,412,971 பெறுமதியான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) கணக்கிணக்கம் செய்யப்பட்ட 16 இருப்பு உறுப்படிகள் தொடர்பில் பௌதீக ரீதியாக உறுதி செய்யப்பட்ட இருப்பு மீதிகளின் பெறுமதிக்கும் பதிவேட்டு மீதிகளின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 19,207,312 பெறுமதியான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. எனினும் கணக்கிணக்கம் செய்யப்பட்டதன் பின்பும் ரூபா 1,314,480 பெறுமதியான மேலுமொரு வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் 10 இருப்பு உறுப்படிகள் தொடர்பான முன்னைய வருட தவறுகளின் திரண்ட தொகை ரூபா 3,534,051 இம்மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வியாபார கடன்பட்டோரின் தனிநபர் பேரேட்டு கணக்குகளின் பிரகாரம், செய்தி சேகரிப்பு முகவர்களுக்காக ரூபா 2,977,811 வட்டி செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் ரூபா 2,297,074 ஆக காட்டப்பட்டிருந்தது. இது, ரூபா 680,737 ஆன ஒரு வேறுபாடாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் வங்கி கணக்கொன்றிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 88 காசுக் கட்டளைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 326,366 ஆனது ஒன்று தொடக்கம் 5 வருடங்கள் வரையிலும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கால எல்லையிலும் தீர்வையாகாத நிலுவைகளாக காணப்பட்டன.

(ஆ) 2016 திசெம்பர் 31இல் உள்ளவாறான ரூபா 796,711,000 பெறுமதியான வியாபார கடன்பட்டோரில் ரூபா 101,547,882 பெறுமதியான ஒரு தொகை ஒரு வருடத்திற்கு மேல் நிலுவையாக காணப்பட்டது. மேலும் இத்தொகையில் ரூபா 28,061,903 அல்லது 28 சதவீதமான ஒரு தொகை

சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டப் பிரிவிற்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது எனினும், சட்டப் பிரிவிற்கு பாரப்படுத்தப்பட்ட இக் கடன்பட்டோரிற்கு எதிரான சட்ட நடவடிக்கையை செயற்படுத்துவதில் 5 தொடக்கம் 18 வருடங்கள் வரையிலான அளவில் குறிப்பிடத்தக்க காலதாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முடிவுறுத்தப்பட்டதும் இரண்டு வருடங்களுக்கு மேலாக ரூபா 6,266,419 நிலுவையை கொண்டிருந்ததுமான செய்தித்தாள் முகவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கம்பனியால் "மிகிந்தலை ஆலோக பூஜாவ" இற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,610,430 ஆன ஒரு தொகை செலவாக அடையாளப்படுத்துவதற்கு பதிலாக வருமதியாக பதிவிடப்பட்டிருந்தது.

(ஈ) கம்பனி 2016 திசெம்பர் 31ல் உள்ளபடி ரூபா 8,548,322 பெறுமதியான செய்தித்தாள்களை கம்பனிக்குச் சந்தாதாரர்களாக தொடர்ந்திராத வாடிக்கையாளர்களிற்கு வழங்கியிருந்தது. அத்தொகையில் 2011 தொடக்கம் 2015 வரை ரூபா 4,065,309 ஆன ஒரு தொகை நிலுவையாக இருந்தது. எனினும் 2017 ஆகஸ்ட் 31இல் மொத்த நிலுவை ரூபா 5,775,258 ஆக குறைக்கப்பட்டிருந்தது.

### 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வில் இணக்கமின்மைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2016இன் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகார சட்டத்தின் 114(1)ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 2ஆம் திகதிய பீ.ஈ.டி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7ஆம் பிரிவு | கம்பனி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட உபகார கொடுப்பனவு மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரித் (பீஏவைஈ) தொகை ரூபா 5,163,583 இனை ஊழியர்களிற்கான உபகார கொடுப்பனவில் இருந்து கழிப்பனவு செய்யாது செலுத்தியுள்ளது. |
| (ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 ஜூன் 2ஆம் திகதிய பீ.ஈ.டி/12ஆம் இலக்க - 9.2 (அ)ஆம் பிரிவு | கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் 2006 யூலை 31 மற்றும் 2013 நவம்பர் 30 இல் உள்ளபடியான உண்மையான பதவியணி 2013 - 2016 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| - 9.3.1ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியும் ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதுடன் அத்திட்டம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒத்திசைவுடன் சபையினாலும் பொருத்தமான அமைச்சினாலும் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். எனினும் இத்தேவைப்பாட்டிற்கு ஏற்ப கம்பனி ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கவில்லை. |
| (ii) 2015 ஜூன் 17ஆம் திகதிய பீ.ஈ.டி 3/2015ஆம் இலக்க | கம்பனி அரச உரிமை முயற்சி ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதியமைச்சினால் அல்லது பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் எவ்வித நிரட்படுத்தல்களையும் இற்றைவரை கம்பனி பின்பற்றியிருக்கவில்லை. இது தொடர்பாக நிதிப் பணிப்பாளர் 2017 ஜூன் 29ஆம் திகதிய அவரது கடிதத்தில் "பீஈடி சுற்றுநிருபங்களில் இருந்து விலக்குவதற்கான விடுவிப்பு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நிதியமைச்சுடன் கலந்துரையாடியிருந்தது" என எனக்கு அறிவித்திருந்தார். எனினும் அவ்வாறான அனுமதியினை இதுவரை பெற்றிருக்கவில்லை. |
| (iii) 2016 திசெம்பர் 16ஆம் திகதிய பீ.ஈ.டி 5/2016ஆம் இலக்க | இலாபத்தை ஈட்டிய கம்பனிகள் 2016ஆம் ஆண்டிற்கான ஊக்கப்படுத்தல் கொடுப்பனவை ஊழியர் வரவு, செயலாற்றல் அல்லது வேறு வடிவிலான ஊக்கப்படுத்தல் கொடுப்பனவாகவும் அத்துடன் உபகாரக் கொடுப்பனவாக ரூபா 13500 மட்டுமே வழங்க முடியும். எனினும் மீளாய்வாண்டிற்கான உபகார கொடுப்பனவாக அடிப்படை சம்பளத்தின் 4 1/2 மாதங்கள் என்ற அடிப்படையில் ரூபா 168.8 மில்லியன் தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் குழுமத்தின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் தொழிற்பாடுகள் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் முறையே ரூபா 26,111,000 மற்றும் 16,204,000 தொகைகளுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 40,631,000 மற்றும் ரூபா 29,008,000 தொகைகளை வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக விளைவித்திருந்தமை, நிதி விளைவுகளில் முறையே, ரூபா 14,520,000 மற்றும் ரூபா 12,804,000 தொகைகளினால் முன்னேற்றமடைந்திருப்பதனை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 2,548,682,715 இனால் விளம்பர வருமானம் அதிகரித்திருந்தமை கம்பனியின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளிற்கான சம்பளங்கள், வரிகள் மற்றும் சாட்டுதல் செய்யப்பட்ட பெறுமான தேய்வு (பங்கிலாபத்திற்கு முன்னரான) என்பவற்றை கருத்திற் கொண்டதன் பின்னர், கம்பனியின் பெறுமதி சேர்ப்பானது முறையே ரூபா 1,784,471,000 மற்றும் ரூபா 2,153,741,000 ஆகவும் 20.7 சதவீதத்திலான ஒரு அதிகரிப்பினையும் காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

**முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 சதவீதம் | 2015 சதவீதம் |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 53.69 | 53.20 |
| இலாப அளவு (விற்பனைக் கிரயத்தின் மீது மொத்த இலாபம்) | 115.92 | 113.68 |
| புரள்வு மீதான நிர்வாகக் கிரயம் | 43.85 | 43.43 |
| புரள்வு மீதான விற்பனை விநியோகக் கிரயம் | 10.86 | 11.10 |
| புரள்வு மீதான நிதிக் கிரயம் | 1.64 | 2.00 |
| திரவத்தன்மை விகிதம் | 2.12 | 2.05 |
| அமிலப் பரிசோதனை விகிதம் | 1.60 | 1.58 |

கம்பனியின் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப எல்லை மற்றும் இலாப அளவு விகிதங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 0.49 மற்றும் 2.24 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1973இன் 28ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட சிலோன் எஸோசியேடட் நியூஸ்பேப்பர் கம்பனிச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம், 17ஆம் பிரிவுகளின் படி, 1973 ஆகஸ்ட் 4ஆம் திகதிய 71/1ஆம் இலக்க அதிவிசேட இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டவாறு (i) ஏதேனும் புதினப் பத்திரிகையை அல்லது வேறு பிரசுரங்களை தாபித்தல், பொறுப்பேற்றுக் கொள்ளல், அச்சிடுதல், பிரசுரித்தல், புழக்கத்தில் விடுதல் மற்றும் அச்சிடுவோர், எழுது உபகரண விநியோகத்தர்கள், இயந்திர கோடு கீறுநர், எண்முறை அச்சிடுவோர், சிலை வரைவாளர், அச்சிவார்ப்போர் போன்ற எல்லா தொழில்களையும் அல்லது அவற்றில் எவற்றையாயினும் கொண்டு நடாத்துதல், (ii) செதுக்கல்கள், அச்சீடுகள், படங்கள் வரைதல்கள் மற்றும் விளம்பர முகவர்கள், விளம்பர ஒப்பந்ததாரர்கள், விளம்பர வடிவமைப்பாளர்கள் போன்ற தொழில்களில் உற்பத்தியாளர்களாக, விநியோகத்தர்களாக, விற்பனைதாரர்களாக தொழிலைக் கொண்டு நடாத்துதல், (iii) படங்கள், கேளிக்கைகள், இசை மற்றும் ஒலி ஆகியவற்றை பரிமாற்றம் செய்தல் அல்லது மீள் உருவாக்குதல் தொடர்பான படச்சுருள்கள், வேறு சாதனங்கள், இயந்திரங்கள் என்பவற்றை உற்பத்தி செய்பவராக தொழிலைக் கொண்டு நடாத்துதல், (iv) சுற்றுலா முகவர்களாக தொழிரலைக் கொண்டு நடாத்துதல் என்பன கம்பனியின் குறிக்கோள்களாக காணப்பட்டன.

மேற்படி குறிக்கோள்களை செயற்படுத்தும் வகையில் மீளாய்வாண்டில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) கம்பனி 06 வகையான செய்தித்தாள்களையும் 09 வகையான பருவகால சஞ்சிகைகளையும் மீளாய்வாண்டில் பிரசுரித்திருந்த அதேவேளை முன்னைய ஆண்டில் 6 வகையான செய்தித்தாள்களையும் 25 வகையான பருவகால சஞ்சிகைகளையும் பிரசுரித்திருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது வாசகர்களை கவரும் விதமாக 'தினமின' மற்றும் 'சிலுமின' செய்தித்தாள்களுடன் வேறு 5 பருவகால சஞ்சிகைகள் இணைப்பிரதிகளாக வழங்கப்பட்டிருந்த அதேவேளை 2015இல் வெளியிடப்பட்ட 11 பருவகால சஞ்சிகைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டில் செய்தித்தாள்கள் விற்பனை தொடர்பான சந்தைப்படுத்தல் செலவு முன்னைய ஆண்டுடன் ஒடுப்பிகையில் ரூபா 14 மில்லியன்களினால் அல்லது 49 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட 06 செய்தித்தாள்கள் மற்றும் 07 பருவகால சஞ்சிகைகளிலிருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்த விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 67.9 மில்லியன்களினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட 06 செய்தித்தாள்கள் மற்றும் 08 பருவகால சஞ்சிகைகளின் பிரதிகளின் எண்ணிக்கை 2,369,491 அல்லது 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. எனினும், 2016ஆம் ஆண்டில் 'மிஹிர' என்றழைக்கப்படும் பருவகால சஞ்சிகையின் விற்பனைப் புரள்வு மாத்திரம் ஒரு அதிகரிக்கின்ற போக்கினைக் காட்டியிருந்தது. 2016இல் 06 செய்தித்தாள்கள் மற்றும் 07 பருவகால சஞ்சிகைகளின் அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1,972,647 பிரதிகளினால் அல்லது 07 சதவீதத்தினால் ஒட்டுமொத்த வீழ்ச்சியாக காணப்பட்டது.

(இ) வருடாந்த வெளியீட்டுத் திணைக்களத்தினை நிறுத்தியமை மற்றும் அரச பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் தொலைபேசி விபரக்கொத்துக்கள் போன்ற அச்சிடல்கள் நின்று போனமை காரணமாக வர்த்தக அச்சிடல் மற்றும் வருடாந்த வெளியீடுகளில் இருந்து பெற்ற வருமானம் 2015இல் ரூபா 315.8 மில்லியன்களிலிருந்து 2016இல் ரூபா 51.4 மில்லியன்களினால் அல்லது 84 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் விளம்பர கட்டணங்களின் அதிகரிப்பு மற்றும் கம்பனியிற்கு அதிக விளம்பரங்களை கவர்வதற்காக விளம்பர அல்லது விற்பனை முகாமையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஒரு ஊக்கப்படுத்தல் திட்டத்தின் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒட்டுமொத்த விளம்பர வருமானம் ரூபா 459 மில்லியன்களினால் அல்லது 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(உ) தலைமை அலுவலக கட்டிடத்தில் உள்ள 2 வளாகங்களை குத்தகைக்கு விடுவதற்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுடன் 2 குத்தகை ஒப்பந்தங்களை கம்பனி மேற்கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வாடகை வருமானமாக ரூபாய் 33.4 மில்லியன்களை உழைத்திருந்தது.எனினும், இவ்வாடகை வருமானத்தை உழைத்திராவிட்டால் 2016ஆம் மீளாய்வு ஆண்டில் கம்பனியின் தேறிய நட்டம் ரூபா 1.04 மில்லியன்களாக அமைந்திருக்கக்கூடும்.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013ஆம் ஆண்டு காலத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கெனெக்ட் (தனியார்) கம்பனி (முன்னைய வரையறுக்கப்பட்ட பிஸ்னஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனி என அறியப்பட்ட), 2016 திசெம்பர் 31இல் உள்ளபடி ரூபா 19,433,501

தொகையான ஒரு திரண்ட நட்டத்திற்கு உள்ளாகி இருந்தது. ஒரு முறையான கடன் வசூலிப்புக் கொள்கையின்மையால் ஐயக்கடன் தொகை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்ததுடன், வியாபார கடன்பட்டோர் ரூபா 15,542,704 தொகையாகவும் அறவிட முடியாக்கடன் ஏற்பாடு ரூபா 14,456,255 ஆகவும் காணப்பட்டது.

(ஆ) வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி (முன்னர் வரையறுக்கப்பட்ட இன்போ மீடியா (தனியார்) கம்பனி என அறியப்பட்ட) 2016 திசெம்பர் 31இல் உள்ளபடி ரூபா 11,615,486 தொகையான ஒரு திரண்ட நட்டத்திற்கு உள்ளாகி இருந்தது. சம்பளம் கூலியாக செலுத்தப்பட்ட ரூபா 5,437,267 தொகை மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,686,480 உடன் ஒப்பிடுகையில் 322 சதவீதமாக காணப்படுகின்றது. தொடர்ச்சியான நட்டத்தின் விளைவாக 2016 பெப்ரவரி 08இல் கம்பனி இயக்குநர் சபை இத்துணைக் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 4,496,257 ஆன ஒரு தொகையினை பதிவளிக்க தீர்மானித்திருந்தது.

(இ) ஆதன மேம்படுத்தல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக 1985இல் தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் புரொபெடி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனி, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து எவ்வித காசுப் பாய்ச்சலையும் உருவாக்கி இருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பரில் உள்ளபடியான மதிப்பிழைந்த காசோலைகளின் மொத்த பெறுமதி ரூபா 10,585,138 ஆக இருந்தது. இவற்றில் ரூபா 5,018,153 பெறுமதியான 82 காசோலைகள் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டது. எனினும் ரூபா 2,501,495 பெறுமதியான 31 காசோலைகளுக்கு எதிராக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(உ) வரையறுக்கப்பட்ட லங்கா புவத் கம்பனியிடம் இருந்து (இலங்கை தேசிய செய்தி முகவர்) 2008 திசெம்பரில் 2400 எண்ணிக்கையான பங்குகள் கொள்வனவிற்காக இடைக்கால கொடுப்பனவாக ரூபா 1.2 மில்லியன தொகையினை கம்பனி செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித திரும்பல்களும் இம் முதலீட்டில் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல், வாங்கல்கள்

செய்தித்தாள் முகவர்களின் நுழைவு ஒப்பந்தத்தின் போது கம்பனியினால் பிடிக்கப்படும் வைப்புக்களுக்கு 10 சதவீத வருடாந்த வட்டியை கம்பனி செலுத்தி இருந்தது. எனினும், இவ்வைப்பு எல்லைகள், இவ்வட்டி கொடுப்பதற்கான தீர்மானம் மற்றும் வட்டி வீதம் என்பவற்றிகற்காக இயக்குநர் சபையிடம் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் 460 செய்தித்தாள் முகவர்களுக்காக ரூபா 2,977,811 ஆன ஒரு தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித முதலீட்டு திட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர், இச் செய்தித்தாள் முகவர்களினால் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகைகளுக்காக 50 கடன் தவணை நாட்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

வீடமைப்புத் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஹோகந்தரவிலுள்ள 8 ஏக்கர் விஸ்தீரணமுடைய காணி 1985ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2012 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மீளாய்வாண்டில் கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு தண்டப் பணம் ரூபா 642,908 ஐ செலுத்த வேண்டியிருந்தது.

### 4.6 வேறு நிறுவனங்களுக்கு மனித வளங்களை விடுவித்தல்

2003இன் யூன் 02ஆம் திகதிய 12ஆம் இலக்க பீஈடி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக மீளாய்வாண்டில் வேறு அரசாங்க நிறுவன சேவைகளுக்காக இரண்டு பத்திரிகையாளர்கள் உள்ளடங்கலாக ஒன்பது அலுவலர்கள், ஒரு இணை பதிப்பாசிரியர், முகாமைத்துவ பதிப்பாசிரியர், உதவி பொது முகாமையாளர் - தொழில்நுட்பம், படப்பிடிப்பாளர், செவ்வை பார்ப்பவர், உதவி முகாமையாளர் மற்றும் பொது உதவியாளர் ஆகியோர் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சார்பில் சம்பளம், கூலி மற்றும் படிகளாக ரூபா 9,512,682 இனை கம்பனி செலவிட்டிருந்தது. இரண்டு பத்திரிகையாளர்கள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ஆறு பத்திரிகையாளர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆளணி முகாமைத்துவத்திற்காக கம்பனியால் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளும் நடைமுறைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனி 2016ஆம் ஆண்டு காலத்தில் மனித வளங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கணக்காய்வு போன்ற துறைகளில் பல மதியுரைஞர்களின் சேவைகளை ரூபா 8,041,274 ஐ செலுத்தி பெற்றிருந்த போதிலும், கம்பனியின் செயலாற்றலின் முன்னேற்றத்திற்காக அவற்றினால் வழங்கப்பட்ட பங்களிப்பினை மதிப்பீட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றை மதிப்பிடுதல் மற்றும் வேலை பகுப்பாய்வை மேற்கொள்வதனூடாக ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும் மீளாய்வாண்டில் அவ்வாறான எவ்வித நிகழ்ச்சித் திட்டங்களும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. 25 சதவீத உள்நாட்டு பயிற்சிகளும் 50 சதவீத வெளிநாட்டு பயிற்சிகளும் திட்டமிடப்பட்டவாறு வழங்கப்பட்டிருந்தது. மேலும், வெளிநாட்டு பயிற்சி பெற்ற அலுவலர்களின் பெயர், அதற்கு நேர்ந்த செலவு, பிரயாணத்தின் நோக்கம் மற்றும் கம்பனிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி சேர்ப்பு போன்றவை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியால் தாமாகவே தயாரித்துக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அட்டவணைப்படி 2016 திசெம்பர் 31இல் பதிப்பாசிரியர் திணைக்களம் மற்றும் பொது நிர்வாக திணைக்களம் என்பவற்றில் முறையே 98 ஊழியர்கள் மேலதிகமாகவும் 181 ஊழியர்களுக்கு வெற்றிடங்களாகவும் இருந்தன. மீளாய்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சுயவிருப்ப ஓய்வூதிய திட்டத்தின் (வீஆர்எஸ்) வெவ்வேறு பதவிகளிலுள்ள 177 ஊழியர்கள் இழப்பீடாக ரூபா 163,573,000 ஐ செலுத்தியதன் பின்னர் வெளியேறியிருந்தனர், எனினும் 2016இல் நிரந்தர அடிப்படையில் 05 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் 105 ஊழியர்களும் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைப்பு திட்டம்

2003 யூன் 02ஆம் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05ஆம் பிரிவின் பிரகாரம் 2013 - 2016 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டமொன்று கம்பனியால் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், கிடைக்கக்கூடியதாகவுள்ள நடைமுறை வளங்கள், நிறுவன கட்டமைப்பு மற்றும் கடந்த 03

ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகள் போன்ற முக்கிய பண்புகள் அதில் உள்ளடங்காதிருந்ததுடன், கூட்டிணைந்த குறிக்கோள்களை அடைதல், பத்திரிகை தொழில் துறையில் முதன்மையாளராவதற்கான குறிப்பான தந்திரோபாயத்தினை உருவாக்குதல், செயற்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தினை அமுல்படுத்துதல், உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துதல் என்பன முகாமைத்துவத்தினால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திற்கமைவாக, மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களுக்கான சந்தைப்படுத்தல் திட்டமொன்றை ஆய்ந்தறிதல் மற்றும் தாபித்தல், விளம்பர வாய்ப்புகளை உருவாக்குவதற்கு உற்பத்தி கருப்பொருள்களை விரிவாக்குதல், தற்போதைய வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பனவுகளை வழங்குதல், நவீன சித்திரக்கலை இணைய அச்சிடுதல் அச்சகத்தினை கொள்முதல் செய்தல் மற்றும் மனிதவள கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஊழியர்களின் திறன்கள் என்பவற்றை தரமுயர்த்துதல் போன்ற மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டவாறு அடையப்பெற்றிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வுக்குழு

திறைசேரியின் பிரதிநிதியொருவரின் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களைக் கொண்ட ஆளொருவரின் தலைமையில் ஆகக் குறைந்தது நிறைவேற்றுத்தரமற்ற 03 சபை உறுப்பினர்களை கணக்காய்வுக் குழு உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், நிறைவேற்றுத் தரமற்ற எந்தவொரு பணிப்பாளரும் அல்லது திறைசேரியின் எப்பிரதிநிதிகளும் அக்கூட்டங்களில் பங்குபற்றியிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3ஆம் பிரிவின் பிரகாரம், பாதீட்டைத் தயாரிப்பதற்கும் அதனை வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்குச் சமர்ப்பிப்பதற்குமான கால இலக்குகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதிடப்பட்ட மற்றும் உண்மையான தொகைகளிற்கிடையே 25 சதவீதம் தொடக்கம் 256 சதவீதம் வரையான வீச்சு குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமை, பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாடுக் கருவியாக பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு விடயங்கள்

(அ) முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் புரொபெடி டிவலொப்மென்ட் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஒப்ஸேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 7,500,000 மற்றும் ரூபா 2,500,000 இலிருந்து எவ்வித திரும்பல்களும் கிடைத்திருக்காமை.

(ii) பேரேட்டு மீதிக்கும் கம்பனியின் தனிநபர் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் தொடர்புடைய கால பதிவேட்டிற்கும் இடையில் வேறுபாடு தோன்றியிருந்தமை.

(iii) 2013 திசெம்பர் 09ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் மீதான குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்த 06 செய்தித்தாள்களின் தொடர்ச்சியான விற்பனை வீழ்ச்சி.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **கட்டுப்பாட்டு பரப்புகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் முகாமைத்துவம் | - | உறுதிப்படுத்தப்படாத கடன்பட்டோர் மீதிகளை மீளாய்வு செய்யாமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | - | பேரேட்டு மீதிகளிற்கும் மெய்மையாய்வு செய்யப்பட்ட பௌதீக இருப்பு மீதிகளிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றமை. |
| (இ) | புரள்வு வருமானம் | - | செய்திப் பத்திரிகைகளின் விற்பனை வருமானம் குறைவடைந்திருந்தமை மற்றும் 11 பருவகால சஞ்சிகைகள் நிறுத்தப்பட்டிருந்தமை. |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | - | ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இல்லாமை. |
| | | - | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளிற்கான அங்கீகரிக்கப்பட் திட்டமொன்று இல்லாமை. |
| | | - | கம்பனியின் செயலாற்றலை உயர்த்துவதற்காக வளவாளர்களினால் வழங்கப்படும் பங்களிப்பின் மீதான மதிப்பீடுகள் இல்லாமை. |
| (உ) | ஊழிய பின்னுரித்துக்கள் | - | பணிக்கொடை நம்பிக்கை நிதியில் இடம்பெற்ற திட்டச் சொத்துக்கள் மற்றும் திட்டப் பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்தப்படாமை. |

**எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயங்கள்

### 2.2.1 குருப் நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயங்கள்

**லேக்ஹவுஸ் கனெக்ட் (பிறைவேட்) லிமிடட்**

i. அவதானிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ii. இணங்கியுள்ளோம். அடுத்த ஆண்டில் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களை சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

iii. அவதானிக்கப்பட்டுள்ளது.

**லேக் ஹவுஸ் புரொப்பட்டி டெவலொப்மென்ட் (பிறைவேட்) லிமிடெட்**

i. அவதானிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் உள்ளக கணக்கியற் கட்டுப்பாடுகள் முறை அமுல்படுத்தப்படவுள்ளது.

ii. ஏற்றுக்கொள்ளப்பட்டது.

iii. அவதானிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**ஒப்சேர்வர் ஜொப்ஸ் (பிறைவேட்) லிமிடட்**

i. அவதானிக்கப்பட்டுள்ளது.

ii. அவதானிக்கப்பட்டுள்ளது. 2017 கணக்குகளில் இந்த விடயத்தை சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 2.2.2 கம்பனியின் நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயங்கள்

#### 2.2.2.1 சிறிய, நடுத்தர அளவு வியாபார முயற்சிகளுக்கான (SME's) இலங்கை கணக்கியற் தரங்களுடன் இணக்கப்பாடு

| | |
|---|---|
| அ) பிரிவு 4.4 | கொடுப்பனவு விலைப்பட்டி செயற்பாடுகளுக்காக ஏனன்சிஎல் 2017 ஜுலை வரை AS 400 கொடுப்பனவு விலைப்பட்டி செயல் வழி முறையைப் பயன்படுத்தியிருந்தது. ஊழியர் குழாம் பெற வேண்டியவைகளை நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பகுதிகளை வேறாக ஒதுக்கி வைப்பதற்கு AS 400 வசதிகளை வழங்கவில்லை. AS 400 தப்பும் வழிகளைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவு பட்டி தொழிற்பாடுகளுக்காக பரவலாக HRIS செயல் வழிமுறையை அமுல்படுத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. 2017 ஆகஸ்ட் தொடக்கம் ஹெஸ்னிட் பிஸினஸ் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிடெடினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய HRIS முறை ஊடாக கொடுப்பனவு பட்டி தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. இப்புதிய கொடுப்பனவு பட்டி முறை ஊடாக இந்த ஆண்டு தொடக்கம் ஊழியர் குழாம் பெற வேண்டியவைகளை பிரித்தெடுக்கின்ற சாத்தியப்பாடு உண்டு. |
| ஆ) (ii) பிரிவு 7.8 (அ, ஆ, இ) | 2017ஆம் ஆண்டில் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை சீர்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| இ) பிரிவு 13.4 | அவதானிக்கப்பட்டுள்ளது. எல்லாக் கையிருப்புக்களும் நுகர்வுப் பொருட்களாகும். அவை வியாபாரக் கையிருப்புக்கள் அல்ல. ஆகவே, நாம் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையைக் கவனத்திற் கொள்வதில்லை. கம்பனி செலவு விலை அடிப்படையிலே கையிருப்புக்களை மதிப்பிடுகின்றது. |
| ஈ) பிரிவு 17, 19 | புதிய ERP முறையை அமுல்படுத்திய பின்னர் சொத்துக்களின் உபயோக காலத்தை மீள் நோக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |
| உ) பிரிவு 21.14 | அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கடமைப்பாடுகளின் தன்மை மற்றும் தொகையின் தன்மை காரணமாக கம்பனி எமது நிதிசார் கூற்றுக்களில் முடிவுபெறாத சட்ட வழக்குகள் தொடர்பான காரணிகளை வெளியிட முடியவில்லை. கம்பனிக்கு எதிராக முடிவுபெறாத நிலையில் 31 வழக்குகள் உள்ளன. ஏற்பாடுகளின் விபரங்கள் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 18இல் குறிப்பிடப்பட்டுள்ளன. |

ஊ) பிரிவு 28.41 28.19 பிரிவுக்கு அமைய சம்பந்தப்பட்ட வெளிப்பாடுகள் நிதிசார் கூற்றுக்களில் செய்யப்பட்டுள்ளன. விபரமான வெளிப்பாடுகள் பணிக்கொடை நம்பிக்கை நிதிய கணக்குகளில் கிடைக்கின்றன. எவ்வாறாயினும், மேலதிக வெளிப்பாடுகள் ஏஎன்சிஎல் நிதிக் கூற்றுக்களில் அடுத்த ஆண்டு கிடைக்கக்கூடியதாக உள்ளது.

**2.2.2.2 கணக்கியற் குறைப்பாடுகள்**

அ) தாமதித்து வேலைக்கு வருகை தரல் கம்பனியின் சம்பளச் செலவினங்களுக்கு கழிக்கப்படுகின்றது. ஆகவே, அது மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் சம்பளச் செலவினங்களுக்கு எதிரிடையாக கட்டணம் விதிக்கப்படுகின்றது. அவ்வாறே பரவலான வருமான கூற்றுக்கு ஏனைய வருமானமாக எடுக்கப்படாமல் சம்பளச் செலவினத்துக்கு எதிரிடையாக கட்டணம் விதிக்கப்பட்டாலும், வரிக்கு முன்னர் தேறிய இலாபத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பதில்லை. எவ்வாறாயினும், 2017 நிதியாண்டிலிருந்து தாமதித்து வேலைக்கு வருகை தரல் ஏனைய வருமான வகையின் கீழ் பரவலான வருமானக் கூற்றுக்கு கட்டணம் விதிக்கப்படவுள்ளது.

ஆ) இணங்கவில்லை. திருப்பியனுப்பப்பட்ட பழைய புதினப் பத்திரிகைகளுக்கான செலவு திருப்பியனுப்பப்பட்ட புதினப் பத்திரிகைகளுக்கு உரித்தான குறிப்பிட்ட ஆண்டுகளில் ஏற்கனவே இலாப நட்டக் கணக்குக்கு கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, முன்னெடுத்துச் செல்கின்ற மொத்த விற்பனை ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படலாம். மேலும் பழைய புதினப் பத்திரிகைகள் பத்திரிகை ரீதியாக அல்லது அலகு அடிப்படையில் அன்றி கிலோகிராம் அடிப்படையிலே விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே, அந்த பழைய புதினப் பத்திரிகைகளின் செலவு அங்கீகாரம் சரியாகக் கணிக்கப்படுவது நடைமுறை சாத்தியமற்றதாகும். எவ்வாறாயினும் இந்த கொள்கை பிரயோகத்தில் இலாப நட்டக் கணக்குக்கு அழுத்தம் ஏற்படுவதில்லை.

இ) தயவு செய்து 2.2.2.1 (ஊ) க்கான பதிவைப் பார்க்கவும்.

**2.2.2.3 சரிக்கட்டப்படாத கணக்குகள்**

அ) இணங்கவில்லை. நிதிசார் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள வயது பகுப்பாய்வு மற்றும் ஒத்திருக்கின்ற தொகைகளுக்கு அமைய கடன்பட்டோர் பேரேடு மிகுதிகளுக்கிடையில் இலங்கை ரூபா 8,513,049/- வித்தியாசம் கொண்டிருப்பதில்லை. 2016 டிசம்பர் 31ஆம் திகதி அன்றுள்ளவாறு ஹோல் பொட்டர் மற்றும் பாடசாலைக்கு அனுப்பப்பட்டவை தொடர்பான கடன்பட்டோர் பேரேடு மிகுதிகள் மற்றும் கடன் பட்டோரின் வயது பகுப்பாய்வு அறிக்கைகளும் கால வேறுபாடு காரணமாக ஒத்திருக்கவில்லை. பின்னர் இந்த வேறுபாடுகள் சரிக்கப்பட்டிருந்தன.

ஆ) சில காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டவை வர்த்தக அச்சிடல் பகுதியில் நிருவகிக்கப்பட்ட வருமானப் பதிவேட்டில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சீராக்கல்கள் அந்தப் பதிவேட்டில் செய்யப்பட்டுள்ளன.

இ) வருடாந்த கையிருப்பு சரிபார்த்தல் 2016 நவம்பரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற VRS போன்ற நடைமுறை மற்றும் தவிர்க்க முடியாத விடயங்கள் காரணமாக சரிக்கட்டப்படுதல் தாமதமாகியது. எவ்வாறாயினும் வித்தியாசத்திற்கான காரணங்கள் இனம்காணப்பட்டு 2017ஆம் ஆண்டில் சீராக்கல் செய்யப்படவுள்ளது.

ஈ) வைப்புக்களுக்கான வட்டி பத்திரிகை முகவர் நிலையங்களுக்கு செலுத்தப்பட்ட வட்டியை மாத்திரமின்றி விளம்பர மேம்பாட்டு அதிகாரிகள் (Canvassers) மற்றும் காசாளர்களுக்கு வழங்கப்பட்ட வட்டியையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2015 ஜுலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்குரிய பத்திரிகை முகவர் நிலைய வைப்புக்களுக்கான வட்டி தவறுதலாக வட்டி செலவினங்கள் கணக்கிற்கு இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தத் தவறு தொகையைத் திருத்தம் செய்வதன் மூலம் 2016 நிதியாண்டில் இனம் காணப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்:**

அ) 2016ஆம் ஆண்டிலிருந்து மணியோடர்களின் காசு வசூலிப்பதற்காக ஏஎன்சிஎல் ஒரு புதிய முறையை அமுல்படுத்தியுள்ளது. இதன் கீழ் ஏஎன்சிஎல் வாடிக்கையாளர்களிடமிருந்து நேரடியாகவே மணியோடர்களைச் சேகரித்து அஞ்சல் அதிபர் அதிபதிக்கு அதனைச் சமர்ப்பிக்கின்றது. இதனால் ஏஎன்சிஎல் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா மணியோடர்களையும் ஒழுங்காக சேகரிக்கக்கூடியதாக உள்ளது. 2012 - 2016 வரையிலான காலப்பகுதியினுள் கீழ்க்காணும் மணியோடர்கள் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய மொத்த மணியோடர்களின் பெறுமதி 2012 இலிருந்து ரூபா 13,327.00 ஆக உள்ளது. இது 2007 இலிருந்து நிலுவையாகவுள்ள மொத்த மணியோடர்களின் 4% மாத்திரமேயாகும்.

| ஆண்டு | தொகை ரூபா |
|---|---|
| 2012 | 3,492.00 |
| 2013 | - |
| 2014 | 2,896.00 |
| 2015 | 4,755.00 |
| 2016 | 2,184.00 |
| மொத்தம் | 13,327.00 |

ஆ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் நிலுவையின் கீழ் காண்பிக்கப்படுகின்ற தொகையான இலங்கை ரூபா 101,547,882 அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எமது சராசரி அறவிட முடியாக் கடன் விகிதம் மொத்த வருமானத்தின் 0.05% விடக் குறைவானதாகும்.

இ) பிரத்தியேகமான ஸ்தூலப் பொருளாகிய மிஹிந்தலை ஆலோக நம்பிக்கை நிதியத்தின் நிதிசார் கூற்றின் காலப்பகுதி மார்ச் 31ஆம் திகதி முடிவடைகின்றது. இந்த நம்பிக்கை நிதியத்துக்குப் பிரத்தியேகமான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் தொகுதி கிடைக்கக்கூடியதாக உள்ளது. 2016 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைகின்ற மிகுதியைக் கொண்டுள்ள ஏஎன்சிஎல் ஸ்தூலப் பொருளுடன் தொடர்புடைய இது சம்பந்தப்பட்ட தரப்பினரின் நடைமுறைக் கணக்கு மிகுதியைப் பிரதிநிதிப்படுத்துகின்றது.

ஈ) அரச துறை பிரிவின் கீழ் வருகின்ற பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் நிலுவை தரவுகள் பின்வருமாறு மாற்றப்பட வேண்டியுள்ளது.

| ஆண்டு | 31.12.2016 அன்று நிலுவை ரூபா | 31.08.2017 அன்று நிலுவை ரூபா | 01.01.2017 - 31.08.2017 வரை செலுத்தித் தீர்க்கப்பட்டவை ரூபா |
|---|---|---|---|
| 2011 | 2,171,715.00 | 2,171,715.00 | 0.000 |
| 2012 | 1,051,979.00 | 1,051,979.00 | 0.000 |
| 2013 | 566,279.00 | 563,393.37 | 2,885.63 |
| 2014 | 149,093.00 | 129,095.05 | 19,997.95 |
| 2015 | 126,243.00 | 111,137.65 | 15,105.35 |
| 2016 | 4,483,013.00 | 1,749,938.00 | 2,735,075.00 |
| | 8,548,322.00 | 5,775,258.07 | 2,773,063.93 |

**2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்திற்கு இணைக்கப்பாட்டின்மை**

அ) 2006ஆம் ஆண்டு 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்க உபகாரப் பங்கிற்கான செலுத்துருவான் வரி கணிப்பீடு செய்யப்பட்டு வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆ) ஏஎன்சிஎல், 1926இல் இலங்கையில் உருவாக்கப்பட்ட பொது பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக விளங்குகின்றது. அதன் 87% வீத பங்குகள் 1973, 28ஆம் இலக்க சட்டம் (விஷேட சரத்துக்கள்) த அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்டின் கீழ் தேசிய மயப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இதன் பங்கு அரசின் சார்பாக பொது நம்பிக்கையாளரினால் நடாத்தப்படுகின்றது. 1973 இலிருந்து ஏஎன்சிஎல் என்றும் நிதி அமைச்சின் (MOF) கீழுள்ள பொது நிறுவனத் திணைக்களத்தின் (PED) ஒழுங்குவிதிகளின் கீழ் இருந்ததில்லை PED சுற்றுநிருபங்களின் கீழ் செயற்பட்டதுமில்லை. PEDயும் இந்த நிலைமையை வாய்மொழி மூலமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த விவகாரம் PED சுற்றுநிருபங்களிலிருந்து விதி விலக்களிக்குமாறு MOF ஐக் கோரி ஏஎன்சிஎல் முன்னாள் தலைவரினால் எடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் பிரதிபலன் எமக்குக் கிடைத்துள்ளது.

ஏஎன்சிஎல் ஒரு போதும் அரசாங்க திறைசேரியில் தங்கியிருந்ததில்லை. ஏஎன்சிஎல் எவ்வாறு செயற்படுகின்றது என்ற ஆளுமை செலுத்துகின்ற நன்கு ஸ்தாபிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கூட்டுறவுத் திட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

## 3. நிதிசார் மீள்நோக்கு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீள்நோக்கு

அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீள்நோக்கு

### 4.1 செயற்பாடு

"இலங்கையின் மிக நம்பிக்கை பெற்ற மற்றும் ஆக்கபூர்வமான ஊடக சேவை வழங்குநர்" என்ற கம்பனி நோக்கின் பரஸ்பர உடன்பாடு கம்பனி 1973 ஆகஸ்ட் 4ஆம் திகதி இலங்கைக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இல. 71/1இல் பிரசுரிக்கப்பட்டுள்ள 1973ஆம் ஆண்டு அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் 28ஆம் இலக்க சட்டம் (விஷேட சரத்துக்கள்) இன் 2 மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் செய்யப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான நோக்கங்களின் சிலவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

அ) அவதானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் பொழுது கம்பனி பின்வரும் பெயர்களைக் கொண்ட 6 பிரதான புதினப் பத்திரிகைகளைப் பிரசுரித்திருந்தது.

i. சண்டே ஒப்சேர்வர்
ii. டெய்லி நியூஸ்
iii. தினமின
iv. சிலுமின
v. தினகரன்
vi. தினகரன் வாரமஞ்சரி

9 பருவ வெளியீடுகள் அதாவது,

**வாராந்தம் -**

i. தருணி
ii. மிஹிர
iii. சரசவிய
iv. புதுசரண
v. சுபசெத்த
vi. மாஞ்சு

**மாதாந்தம் -**

vii. வண்ண வானவில்
viii. மிஹிதுரு
ix. தெனமுத்து

2015ஆம் ஆண்டில், நட்டம் மற்றும் விநியோக செயற்பாடுகளின் முகாமைத்துவ திறமையீனம் காரணமாக முகாமைத்துவம் 16 பருவ வெளியீடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2016ஆம் ஆண்டில் நிறைவுபடுத்தும் பத்திரிகைகளாக கீழ்காணும் 5 பருவ வெளியீடுகளை வெளியிட்டிருந்தன.

i. கிரீடா
ii. விதுனென
iii. சித்மின
iv. ஆரோக்யா
v. அத்துருமித்துரு

மேலும், 3 பருவ வெளியீடுகள் (சித்மின, ஆரோக்யா மற்றும் அத்துருமித்துரு) 2017ஆம் ஆண்டில் ஒழுங்கான விநியோக முறைகளுடன் பருவ வெளியீடுகளை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதினப் பத்திரிகை விநியோகத்திலிருந்து வீழ்ச்சியடைந்துள்ள சந்தைப் பங்கினை பிடித்துக் கொள்ளக்கூடிய வகையில் கம்பனி பின்வரும் பல்வேறு உபாயங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

i. விநியோக வருமானத்தை மேம்படுத்துவதற்கு புதினப் பத்திரிகை முகவர் நிலையங்கள் மற்றும் எமது உள்ளூர் பத்திரிகை நிருபர்களுடன் தொடர்ச்சியாக முன்னேற்ற கூட்டங்களை நடாத்துதல்.

ii. கிராம நகர சம்பிரதாயங்கள், சுவரெட்டி நடவடிக்கைகள் டிவி, ரேடியோ மற்றும் திரைப்பட மண்டப வர்த்தகங்கள் போன்ற பொதுமக்கள் விழிப்புணர்ச்சித் திட்டங்கள்.

iii. விநியோகப் பகுதியின் விநியோகங்களின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு புதியதொரு விநியோக முறையை அறிமுகப்படுத்துதல்.

iv. பிராந்திய விற்பனை நிறைவேற்று அதிகாரிகளின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு GPS பின்பற்றிச் செல்கின்ற முறை ஆரம்பித்தல்.

v. திருப்பியனுப்பப்படுகின்ற புதினப் பத்திரிகைகளின் மிருதுவான புலனாய்வுக்காக QR இரகசிய குறியீடு அளவை முறை.

vi. பத்திரிகை முகவர் நிலைய வருமானத்தைக் கவருகின்ற நோக்குடன் பிரதான சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளுக்கு பத்திரிகை முகவர்களின் தரகு தொகையை அதிகரித்தல்.

ஆ) அவதானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் பொழுது மேலே கலந்துரையாடியவாறு விநியோக எண்ணிக்கைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு முகாமைத்துவம் பல்வேறு உபாயங்களை அமுல்படுத்தியுள்ளது. இது தவிர, முகாமைத்துவம், எமது சந்தைப் பங்கை பிடித்துக் கொள்வதற்கு ஆசிரியர் பீட பக்க வடிவமைப்புக்கள், ஆசிரியர் பீட உள்ளடக்கம் மற்றும் அச்சிடல் தரத்தில் மாற்றங்களைச் செய்துள்ளதுடன், ஒப்பந்த அடிப்படையில் இலத்திரனியல் ஊடகத்துடன் பிரசார நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இ) கிடைக்கின்ற வரையறுக்கப்பட்ட அச்சக இயந்திரங்களுடன் பிரதானமாக புதினப் பத்திரிகை வருமானத்தை மையமாகக் கொண்டு மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் முகாமைத்துவம் அரச பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் தொலைபேசி கோவையை அச்சிடுகின்ற வேலையைப் பொறுப்பேற்கவில்லை. வருடாந்த பிரசுரப் பகுதி தொடர்ச்சியாக நட்டத்தில் இயக்கியதன் காரணமாக அப்பகுதி மூடப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரத்தில் (Query) குறிப்பிடப்பட்டுள்ள தொகையினால் நடைமுறை வருமானம் குறைவடைந்துள்ள போதிலும், புதினப் பத்திரிகை சந்தைப் பங்கை அதிகரிக்கும் நீண்ட தவணை நோக்குடன் முகாமைத்துவம் இந்த இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளது.

ஈ) இணங்கியுள்ளோம். விளம்பரக் கட்டணங்கள் அதிகரிப்பின் ஒரு பகுதியாக விளம்பர முகவர் நிலைய வருட, இறுதி ஊக்குவிப்புக்கள், விற்பனை முகாமையாளர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு, பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பின் பலனாக முழு மொத்த விளம்பர வருமானத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தவுள்ளது.

உ) வருமானம் ஈட்டுகின்ற நோக்கில் கம்பனி மிகையான இடவசதியை வாடகைக்கு விடுகின்ற கொள்கையைக் கொண்டுள்ளதுடன், இந்த செயற்பாடுகள் ஏனைய வருமானமாக எடுக்கப்பட்டுள்ளது. கம்பனி தொடர்ந்து மிகையான இடவசதிகளை வாடகைக்கு கொடுத்து வருமான பரவலாக்கல் மூலமாக கம்பனியின் நிலையான வருமான வளமாக உத்தேசிக்கின்றது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

அ) 2013 மார்ச் தொடக்கம் 2016 ஜனவரி வரை இந்த பருவ வெளியீடுகளில் ரூபா 49.8 மில்லியன் பெறுமதியான விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள். இதில் ரூபா 15.4 மில்லியன் நீங்கலாக ரூபா 34.3 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதனையும் நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

தலைவருடன் கலந்துரையாடப்பட்ட பிரகாரம் விளம்பரதாரர்கள் தொடர்ச்சியாக இணைந்து கொள்வது போன்று இந்த பருவ வெளியீடுகளை மேம்படுத்தக்கூடிய வகையில் Businesslk இலுள்ள விளம்பரதாரர்களுக்கு விளம்பர இடவசதி மேம்பாட்டை வழங்குவதற்கு ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பருவ வெளியீடுகளுடன் விளம்பரப்படுத்தலை நிருவகிப்பதற்கு விளம்பரதாரர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாக இந்த இடவசதி வழங்கப்பட்டுள்ளதுடன், இலவச அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தவறுதலாக இவற்றிற்கு கட்டணம் கோரி விளம்பர விலைப்பட்டியல் (Bill) அனுப்பப்பட்டுள்ளன.

ஆகவே, விளம்பரதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்பொழுதுள்ள கொடுப்பனவு நிலுவை மேம்பாட்டு அடிப்படையைக் கொண்டதாகும். பெற்றுக்கொள்ளக்கூடியவையோ அல்லது அறவிடக் கூடியவையோ அல்ல என்பதை நாம் உங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றோம். இது தொடர்பாக நாம் ஏற்கனவே அறவிட முடியாகக் கடன் ஒதுக்கம் செய்துள்ளோம்.

ஆ) அவதானிக்கப்பட்டுள்ளது.

இ) அவதானிக்கப்பட்டுள்ளது.

ஈ) தயவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அவமதிக்கப்பட்ட காசோலைகளின் பட்டியலைப் பார்க்கவும். 2009 முதல் 2016 வரை திருப்பியனுப்பப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 10,585,138.02

ஆகும். ஏஎன்சிஎல் மொத்த ரூபா 2,501,495.47 தொகையான 31 திருப்பியனுப்பப்பட்டுள்ள காசோலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. இது மொத்த திருப்பியனுப்பப்பட்ட காசோலைகள் பெறுமதியின் 24% ஆகும்.

உ) அவதானிக்கப்பட்டுள்ளது.

### 4.3 தொடர்ச்சியான தன்மை கொண்ட கொடுக்கல் வாங்கல்கள்

காலதாமதமின்றி கொடுப்பனவுகளைச் செலுத்தித் தீர்ப்போருக்கு வட்டி வழங்குதல் புதினப் பத்திரிகைக் கைத்தொழிலின் வழமையான நடைமுறை ஆகும். ஏஎன்சிஎல், பத்திரிகை முகவர் நிலையங்களுக்கு நேர காலத்துடன் நிலுவைகளைச் செலுத்தித் தீர்ப்பதற்காக ஒரு தெரிவை மாத்திரமே வழங்குகின்றது. எவ்வாறாயினும் போட்டி புதினப் பத்திரிகை கம்பனிகள் அவர்களின் தெரிவாக பல தெரிவுகளை வழங்குகின்றன.

தாமதமின்றி நிலுவைகளை செலுத்தித் தீர்ப்பதற்காக திணைக்களத்துடன் சபை அங்கீகாரம் கிடைக்கவில்லை. 2016ஆம் ஆண்டில் நேர காலத்துடன் அறவிட்டமைக்காக ரூபா 2.9 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

### 4.4 கைவிடப்பட்ட அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஹோகந்தர காணியின் உரித்துடைமை 2013ஆம் ஆண்டில் ஏஎன்சிஎல் இற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் VRS மற்றும் தொழிற்படு மூலதனத்திற்கு கடன் பெற்றுக்கொள்வதற்கு கொமர்ஷல் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது.

### 4.5 இனம் காணப்பட்டுள்ள நட்டங்கள்

கப்பலிலிருந்து இறக்குதல் தாமதம் காரணமாக உரிய நேரத்தில் அச்சிடுவதற்கான பொருட்கள் கம்பனிக்கு வந்தடையவில்லை. இதன் விளைவாக கல்விப் பிரசுரத் திணைக்களத்துக்குப் பாடசாலைப் புத்தகங்களை வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

### 4.6 கம்பனியின் இயற்கை வளங்களை ஏனைய நிறுவனங்களுக்கு விடுவித்தல்

முகாமைத்துவ அங்கீகாரம் அடிப்படையில் இரண்டு பத்திரிகையாளர்கள் அரசாங்க நிறுவனங்களுக்கு கருமமாற்றுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். வியாபார தேவைக்கு அமைய முகாமைத்துவ அங்கீகாரத்தின் பேரில் நாம் ஆறு பத்திரிகையாளர்களை நாம் வேலைக்கு சேர்த்துள்ளோம்.

### 4.7 ஆளணி நிருவாகம்

அ) நாம் ஏற்கனவே ஏழு மனிதவள கொள்கைகளை முடிவு செய்துள்ளோம்.

ஆ) மனிதவள ஆலோசகரின் உதவியுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மனிதவள செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதன் வெளிப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் மீள் மதிப்பிடப்பட்டுள்ளன.

- 2016 மற்றும் 2017 க்கான பிரதான செயற்பாட்டு குறியீட்டாளர்கள் எல்லா ஊழியர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- ஆறு மனிதவள கொள்கைகள் முடிவுநிலை அடைந்துள்ளது.
- “புதிய செயற்பாட்டு மீள்நோக்கு முறை” தொடர்பாகவும் “தமக்குக் கீழ் பதவியில் உள்ளவர்களை எவ்வாறு வழிநடாத்துவது” என்பது தொடர்பாகவும் மேற்பார்வையாளர்களைப் பயிற்றுவித்தல்.
- முடிவாக்கப்பட்ட மனிதவள மீள் கட்டமைப்பு.
- சில சிரேஷ்ட முகாமைத்துவ தொழில் விபரங்களை முடிவாக்குதல்.
- புதிய வருடாந்த செயற்பாட்டு மீள் நோக்கு அடிப்படையில் முழுமையான வருடாந்த செயற்பாட்டு மீள் நோக்கு சுற்று, மேம்படுத்தல் சுற்று, வருடாந்த சம்பள அதிகரிப்பு சுற்று என்பன நடாத்தப்பட்டன.
- பொதுசன தொடர்பு துயரங்கள் கையாளுகின்ற செயற்பாடு நடாத்தப்பட்டன.
- பிரேரிக்கப்பட்ட பயிற்சி முறை செயற்றிட்டம் வரையப்பட்டது.
- ஒரு வெளிவாரி மதிப்பீட்டு கம்பனி (LMRB) ஊடாக ஊழியர் இணைந்த மதிப்பீடு (EES) நடாத்தப்பட்டது.

இ) தொழில் விபரங்கள் மற்றும் சம்பள மதிப்பீடு, தயாரிப்பதற்காக மூன்று கம்பனிகளிடமிருந்து விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. சபை பத்திரங்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்திற்குக் காத்திருக்கின்றன.

படித்தல் மற்றும் அபிவிருத்தி விசாரணைப் பத்திரங்களைப் பார்க்கவும். குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் படித்தல் மற்றும் அபிவிருத்தி பிரிவினால் பராமரிக்கப்படுகின்றன. தேவையாயின் வேண்டப்படுகின்ற விபரங்கள் வழங்கப்பட முடியும்.

ஈ) இந்த ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் பேரிலும் வியாபாரத் தேவையின் பேரிலும் செய்யப்பட்டுள்ளன மிகக் குறிப்பிடப்பட்ட தொழில் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலையில் நிரந்தர அடிப்படையில் 5 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 5. பொறுப்புடைமை மற்றும் நல்ல ஆளுமை

### 5.1 கூட்டுறவுத் திட்டம்

மேற்கூறப்பட்டவை தொடர்பாக உங்களது அபிப்பிராயங்கள் பெரும்பாலும் தெளிவற்றவையாகும். எவ்வாறாயினும், 2013 - 2016 வரையிலான காலப் பகுதியினுள் கூட்டுறவுத் திட்டம் தற்பொழுது காணப்படுகின்றன என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம்.

எம்மால் விளங்க முடியுமான வரை, உங்களால் குறிப்பிடப்பட்ட நடைமுறை வளங்கள் நாம் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட “சக்தி” என்ற பதம் மூலம் நீங்கள் பிரதிநிதிப்படுத்தப்படலாம். உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பு மற்றும் மூன்று ஆண்டுகள் எதிர்வு கூறல் பெறுபேறுகள் முழுமையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு கம்பனிக்கான உபாயங்கள் கையாளப்பட்டு நிருவகிக்கப்பட்டுள்ளன.

### 5.2 வருடாந்த செயற்றிட்டம்

இந்த பொதுவான அபிப்பிராயத்துடன் நாம் இணங்குவதில்லை.

இந்த ஆண்டில் நாம் வாராந்த செயற்பாடுகள் மீள் நோக்குக் கூட்டங்கள் ஊடாக எல்லா செயற்பாடுகளினதும் கடுமையான கண்காணிப்பு செயற்பாடுகளை மேற்கொண்டோம். மிகுதியான எல்லா செயற்பாடுகளும் குறிப்பிட்ட திகதிக்கு முன்பதாகவே நிகழ்ச்சி நிரலுக்கு நாம் கொண்டு வந்துள்ளோம். அத்துடன் முன்னேற்றம் பரவலாகக் கண்காணிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக பாரிய வருமான வளர்ச்சி மாத்திரமின்றி கூடுதலான அச்சு இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக சந்தைத் தேவையை நன்கு வழங்கக்கூடியதாக மிகுதியாகவுள்ள எல்லா அச்சக இயந்திரங்களையும் தரமுயர்த்தப்பட்டதுடன், சிலர் மற்றும் சமூக ஊடகத்துறையில் பல வெகுமதிகளையும் பெற்றுக்கொண்டோம். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு நாம் பல கொள்கைகள் நடைமுறைகள், தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் சிறந்த பயிற்சிகளைத் தோற்றுவித்த மனிதவள முயற்சிகளுக்கான பொன் ஆண்டாக கருதுகின்றோம்.

### 5.3 கணக்காய்வுக்குழு

அவதானிக்கப்பட்டுள்ளது.

### 5.4 வரவு செலவுக் கட்டுப்பாடு

அ) தயவு செய்து 2.4 (ஆ) க்கான பதிவைப் பார்க்கவும்.

ஆ) அவதானிக்கப்பட்டுள்ளது.

### 5.5. தீர்க்கப்படாத கணக்காய்வு

அ) (i) அவதானிக்கப்பட்டுள்ளது.

(ii) 2016 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஹோல் பொட்டர்ஸ் மற்றும் பாடசாலைக்கு அனுப்பப்பட்டவைக்கான கடன்பட்டோரின் பேரேடு மிகுதிகள் மற்றும் கடன்பட்டோர் வயது பகுப்பாய்வு அறிக்கையின் மிகுதிகளும் நேர மாற்றம் காரணமாக ஒத்திருக்கவில்லை. பின்னர் இந்த வேறுபாடுகள் சீர்ப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) தரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் விற்பனைகளை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் பக்க வடிவமைப்பை மாற்றுவதற்கும் முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

அ) இணங்கவில்லை. குறிப்பிட்ட கடன்பட்டோரினால் கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தப்படாத போதிலும் 2016 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு பெரும்பாலான செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய நிலுவைகள் 30.06.2017 அன்று செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளன.

ஆ) மேலே 2.2.2.3(இ) யில் குறிப்பிடப்பட்டவாறு

இ) தற்போது விநியோக வருமானம் மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்துடன் எதிர்காலத்தில் இந்த நிலைமையைப் பலப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஈ) பயிற்சியளித்தல் கலண்டர் முடிவாக்கப்பட்டதுடன் பயிற்சியளித்தல் பயிற்சியளிக்கும் கலண்டரின் அடிப்படையில் நடாத்தப்பட்டுள்ளன. படித்தல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஏனன்சினல் ஊழியர்களின் வினைத்திறனைத் தரமுயர்த்துவதற்கு உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சிகளை நடாத்துகின்றது.

சாமர்த்தியம் பெற்றுக்கொள்ளல் (ஆட்சேர்ப்பு) கொள்கை மற்றும் செயற்பாடு மற்றும் பதவியுயர்வு கொள்கை முடிவாக்கப்பட்டுள்ளன.

விதிகளும் நிபந்தனைகளும் மனிதவள ஆலோசகரினால் இறுதியாக்கப்பட்டுள்ளன. அத்துடன் வெளிப்பாடு வருடாந்த KPI செயற்பாடு, வருடாந்த மேம்பாடு சுற்று, துயரங்கள் கையாளுதல் செயற்பாடு மற்றும் ஊழியர் இணைப்பு மதிப்பீடு முதலியனவற்றினூடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உ) தயவு செய்து 2.2.2.1 (ஊ) பதிவைப் பார்க்கவும்.



**கிரிசாந்த குரே**

**தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்**

# மனித வளங்கள்

ஏன்சிஎல் அதன் வியாபாரத்தின் இதயமாக அதன் தொழில் சக்தியை அங்கீகரித்துள்ளது. கம்பனிக்காகத் தமது முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆயத்தமாக இருக்கின்ற மனித வளத்தை மீள் மதிப்பீடு செய்து தொடர்ச்சியாக அங்கீகாரத்தை வழங்குகின்றது. அதன் உபாய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மனித வளத்தை நெறிப்படுத்துகின்ற யோசனையை வைத்திருக்கின்றது. ஏன்சிஎல் அதன் தொழிற்பலத்திற்கு சேமநல வசதிகளை விரிவுபடுத்துகின்ற அதேவேளை தொடர்ந்து கவர்ச்சியாகவும் நிலையாகவும் அதன் ஆற்றலை பரந்தளவில் வைத்திருப்பதற்கும் பணியாற்றி வருகின்றது.

## பால் ரீதியான மாற்றம் (டிசம்பர் 31 அன்றுள்ளவாறு)

| பால் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| ஆண் | 1,191 | 78% | 1,387 | 80% |
| பெண் | 330 | 22% | 356 | 20% |
| **மொத்தம்** | 1,521 | 100% | 1,743 | 100% |

பால் ரீதியான மாற்றம் 2016




பால் ரீதியான மாற்றம் 2015




## சேவை பகுப்பாய்வு

### ஊழியரின் சராசரி சேவை ஆண்டுகள்

| சேவை ஆண்டுகள் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 25க்கு மேல் | 177 | 12% | 209 | 12% |
| 20 - 25 | 199 | 13% | 250 | 14% |
| 5 - 20 | 875 | 58% | 1,041 | 60% |
| 5க்குக் கீழ் | 270 | 17% | 243 | 14% |
| **மொத்தம்** | 1,521 | 100% | 1,743 | 100% |

சேவை பகுப்பாய்வு 2016




சேவை பகுப்பாய்வு 2015




## வயது ரீதியான பகுப்பாய்வு

| வயது | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 50க்கு மேல் | 363 | 24% | 412 | 24% |
| 40 - 50 | 569 | 37% | 660 | 38% |
| 30 - 40 | 500 | 33% | 586 | 33% |
| 20 - 30 | 89 | 6% | 85 | 5% |
| **மொத்தம்** | 1,521 | 100% | 1,743 | 100% |

வயது ரீதியான பகுப்பாய்வு 2016




வயது ரீதியான பகுப்பாய்வு 2015



# பரவலான வருமானக்கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப் புக்கள் | கம்பனி 2016 ரூபா '000 | கம்பனி 2015 ரூபா '000 மீள குறிப் பிடப்பட்ட | குரூப் 2016 ரூபா '000 | குரூப் 2015 ரூபா '000 மீள குறிப் பிடப்பட்ட |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 21 | 3,046,881 | 2,945,218 | 3,050,156 | 2,954,438 |
| விற்பனைச் செலவு | | (1,411,135) | (1,378,305) | (1,412,381) | (1,384,816) |
| மொத்த இலாபம் | | 1,635,746 | 1,566,913 | 1,637,775 | 1,569,622 |
| ஏனைய வருமானம் | 22 | 121,844 | 124,182 | 122,264 | 124,474 |
| | | 1,757,590 | 1,691,095 | 1,760,039 | 1,694,096 |
| நிருவாக செலவினங்கள் | | (1,172,608) | (1,279,053) | (1,183,375) | (1,286,149) |
| விநியோக செலவினங்கள் | | (330,909) | (327,051) | (334,205) | (333,240) |
| செயற்பாட்டு இலாபம் | 23 | 254,073 | 84,991 | 242,459 | 74,706 |
| நிதி செலவினங்கள் | | (49,929) | (58,879) | (49,938) | (58,502) |
| VRS இற்கு முன்னர் இலாபம் | | 204,144 | 26,111 | 192,521 | 16,204 |
| சுயேட்சையாக ஓய்வுபெறல் திட்டம் (VRS) செலவினங்கள் | 24 | (163,513) | - | (163,513) | - |
| வரி மற்றும் நியாய பெறுமதி சீராக்கலுக்கு முன்னர் இலாபம் | | 40,631 | 26,111 | 29,008 | 16,204 |
| வரி செலவினம் | 26 | (8,392) | (4,688) | (8,515) | (4,956) |
| நியாய பெறுமதி சீராக்கல் | | 115 | 28,690 | 115 | 28,690 |
| இந்த ஆண்டுக்கான இலாபம் | | **32,354** | **50,113** | **20,608** | **39,938** |
| தலைமை உரிமையாளர்களுக்கு சுமத்தக்கூடிய இலாபம் | | **32,354** | **50,113** | **20,608** | **39,938** |

| டிசம்பர் 31 அன்றுள்ளவாறு | குறிப்புக்கள் | கம்பனி 2016 ரூபா '000 | 2015 ரூபா '000 மீள குறிப்பிடப்பட்ட | 2014 ரூபா '000 மீள குறிப்பிடப்பட்ட | குரூப் 2016 ரூபா '000 | 2015 ரூபா '000 மீள குறிப்பிடப்பட்ட | 2014 ரூபா '000 மீள குறிப்பிடப்பட்ட |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள் அல்லாத** | | | | | | | |
| நடைமுறை சொத்துக்கள் | | | | | | | |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 06 | 357,877 | 251,856 | 326,266 | 358,159 | 252,535 | 327,471 |
| முதலீடு சொத்து | 07 | 29,800 | 31,455 | - | 29,800 | 31,455 | - |
| நீண்ட தவணை நிதிசார் சொத்துக்கள் | 08 | 180,056 | 179,941 | 151,251 | 180,056 | 179,941 | 151,251 |
| துணைக் கம்பனியில் முதலீடு | 09 | 13,000 | 13,000 | 13,000 | - | - | - |
| தாமதித்த வரி சொத்துக்கள் | 10 | 32,025 | 36,967 | 30,888 | 32,020 | 36,967 | 30,888 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **612,758** | **513,219** | **521,405** | **600,035** | **500,898** | **509,610** |
| நடைமுறை சொத்துக்கள் | | | | | | | |
| பொருட்பட்டியல்கள் | 11 | 327,509 | 273,882 | 532,233 | 327,509 | 273,882 | 532,233 |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவை | 12 | 880,043 | 907,494 | 951,226 | 874,522 | 909,378 | 948,800 |
| நடைமுறை வரி சொத்துக்கள் | 26 | 9,169 | - | 3,322 | 9,169 | - | 3,296 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 13 | 109,106 | 14,592 | 74,613 | 109,672 | 14,703 | 89,021 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **1,325,827** | **1,195,968** | **1,561,394** | **1,320,873** | **1,197,963** | **1,573,350** |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,938,585** | **1,709,187** | **2,082,799** | **1,920,908** | **1,698,861** | **2,082,960** |
| சமநிலை மற்றும் பொறுப்புக்கள் | | | | | | | |
| சமநிலை | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 14 | 34,837 | 34,837 | 34,837 | 34,837 | 34,837 | 34,837 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் | | 522,752 | 490,398 | 440,285 | 507,551 | 482,447 | 442,509 |
| **மொத்த சமநிலை** | | **557,589** | **525,235** | **475,122** | **542,388** | **517,284** | **477,346** |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | |
| வைப்புக்கள் | 15 | 171,159 | 173,464 | 173,815 | 171,159 | 173,464 | 173,815 |
| கடன் பெறுகைகள் | 16 | 246,655 | 73,784 | 143,805 | 243,155 | 70,284 | 140,305 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 17 | - | 1,348 | 2,634 | - | 1,348 | 2,635 |
| ஊழியர் நலன்புரி செலுத்த வேண்டியவை | 20 | 318,298 | 332,675 | 322,093 | 318,298 | 332,675 | 322,093 |
| கோரிக்கைகளுக்கான ஏற்பாடு | 18 | 20,000 | 19,250 | 20,000 | 20,000 | 19,250 | 20,000 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **756,112** | **600,521** | **662,347** | **752,612** | **597,021** | **658,848** |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | | | | | |
| கடன் பெறுகைகள் | 16 | 277,179 | 287,955 | 509,376 | 277,179 | 287,957 | 509,378 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 17 | 1,349 | 1,286 | 4,205 | 1,349 | 1,286 | 4,205 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 19 | 346,356 | 294,190 | 431,749 | 347,380 | 295,313 | 433,183 |
| மொத்த நடைமுறை பொறுப்புக்கள் | | **624,884** | **583,431** | **945,330** | **625,908** | **584,556** | **946,766** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,380,996** | **1,183,952** | **1,607,677** | **1,378,520** | **1,181,577** | **1,605,614** |
| **மொத்த சமநிலை மற்றும் பொறுப்புக்கள்** | | **1,938,585** | **1,709,187** | **2,082,799** | **1,920,908** | **1,698,861** | **2,082,960** |

கணக்கியற் கொள்கைகள் மற்றும் ஏனைய நிதிசார் கூற்றுக்களின் குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் பூரண பாகங்களை நிறுவுகின்றது. 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் இணக்கப்பாடு தேவைகளுக்கு அமைவாக இந் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என சான்று பகர்கின்றது.

**விராஜித் போய்ஸ் - பிரதி பொது முகாமையாளர் - நிதி**

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்புடையதாகும். சபைக்காகவும் அதன் சார்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

**காவன் ரத்நாயக்க - தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்** **எமரிக் பெர்னாண்டோ - பணிப்பாளர் - நிதி**

20 மார்ச் 2017
கொழும்பு.

# நிதி ஓட்டக்கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப் புக்கள் | கம்பனி 2016 ரூபா '000 | கம்பனி 2015 ரூபா '000 | குருப் 2016 ரூபா '000 | குருப் 2015 ரூபா '000 |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு கருமங்கள்** | | | | | |
| செயற்பாடுகளிலிருந்து விருத்தி செய்யப்பட்ட காசு | 27 | 221,422 | 328,446 | 221,796 | 313,600 |
| செலுத்திய வட்டி | | (49,929) | (58,879) | (49,938) | (58,502) |
| செலுத்திய வருமான வரி | | (17,039) | (3,026) | (17,215) | (3,145) |
| செலுத்திய பணிக்கொடை | | (88,389) | (38,042) | (88,389) | (38,042) |
| கம்பனிக்கு எதிரான கோரிக்கைகளுக்கான கொடுப்பனவு | | (900) | (12,209) | (900) | (12,209) |
| செயற்பாட்டு கருமங்களிலிருந்து நிதி ஓட்டம் | | 65,166 | 216,291 | 65,355 | 201,702 |
| **முதலீட்டு செயற்பாடுகள்** | | | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கொள்வனவு | | (188,569) | (59,180) | (188,719) | (59,180) |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் விற்பனை | | 12,698 | 11,382 | 12,698 | 11,382 |
| வைப்புகளில் அதிகரிப்பு/ (குறைப்பு) | | (2,306) | (351) | (2,305) | (351) |
| பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி | | 9,838 | 11,868 | 10,258 | 12,160 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட பங்கிலாபம் | | 3,486 | 2,254 | 3,486 | 2,254 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட வாடகை வருமானம் | | 33,390 | 33,760 | 33,390 | 33,760 |
| மூலதன நடைமுறை வேலையின் (அதிகரிப்பு)/ குறைப்பு | | - | 19,603 | - | 19,603 |
| செயற்பாட்டு கருமங்களிலிருந்து நிதி ஓட்டம் | | (131,462) | 19,336 | (131,193) | 19,627 |
| **நிதி செயற்பாடுகள்** | | | | | |
| கடன் பெறுகைகளில் அதிகரிப்பு/ (குறைப்பு) | | 263,176 | (332,526) | 263,176 | (332,526) |
| நிதி செயற்பாடுகளிலிருந்து நிதி ஓட்டம் | | 263,176 | (332,526) | 263,176 | (332,526) |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய மாற்றம்** | | **196,880** | **(96,899)** | **197,338** | **(111,196)** |
| **ஜனவரி 1ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | **(179,776)** | **(82,877)** | **(179,668)** | **(68,472)** |
| **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | **13** | **17,104** | **(179,776)** | **17,670** | **(179,668)** |

# உரிமை மாற்றங்களின் கூற்று

**கம்பனி**

| | குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா '000 | தேங்குகின்ற இலாபங்கள் ரூபா '000 | மொத்தம் ரூபா '000 |
|---|---|---|---|
| 2015 ஜனவரி 1ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | 34,837 | 409,397 | 444,234 |
| மீளக்குறிப்பிடப்பட்டவையிலுள்ள மாற்றங்களின் விளைவு | | 30,888 | 30,888 |
| 2015 ஜனவரி 1ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி (மீளக் குறிப்பிடப்பட்டது) | 34,837 | 440,285 | 475,122 |
| 2015ஆம் ஆண்டுக்கான இலாபம் | | 50,113 | 50,113 |
| 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | 34,837 | 490,398 | 525,235 |
| 2016ஆம் ஆண்டுக்கான இலாபம் | | 32,354 | 32,354 |
| **2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி** | **34,837** | **522,752** | **557,589** |

**குருப்**

| | குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா '000 | தேங்குகின்ற இலாபங்கள் ரூபா '000 (மீளக் குறிப்பிடப்பட்ட) | மொத்தம் ரூபா '000 |
|---|---|---|---|
| 2015 ஜனவரி 1ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | 34,837 | 411,621 | 446,458 |
| மீளக்குறிப்பிடப்பட்டவையிலுள்ள மாற்றங்களின் விளைவு | | 30,888 | 30,888 |
| 2015 ஜனவரி 1ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி (மீளக் குறிப்பிடப்பட்ட) | 34,837 | 442,509 | 477,346 |
| 2015ஆம் ஆண்டுக்கான இலாபம் | | 39,938 | 39,938 |
| 2015 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | 34,837 | 482,447 | 517,284 |
| நடைமுறைக் கணக்கு | | 4,496 | 4,496 |
| 2016ஆம் ஆண்டுக்கான இலாபம் | | 20,608 | 20,608 |
| **2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி** | **34,837** | **507,551** | **542,388** |

# நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்

## 1. கூட்டுறவு தகவல்

### 1.1 பொதுவான

த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். அத்துடன் இலங்கையில் நிரந்தர இருப்பிடத்தைக் கொண்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10 அமைந்துள்ளது. அத்துடன் வியாபாரத்தின் பிரதான இடங்கள் பின்வருமாறு:

1. கண்டி கிளை - இல. 22, தலதா வீதி, கண்டி.
2. கதிர்காமம் கிளை - ஸ்ரீ ரேவத்த மாவத்தை, கதிர்காமம்.
3. மாத்தறை கிளை - இல. 29, 30, 31, புதிய பஸ் நிலைய கடைத்தொகுதி, மாத்தறை.
4. அனுராதபுரம் கிளை - ஹரிஸ்சந்திர மாவத்தை, புதிய நகரம், அனுராதபுரம்.
5. யாழ்ப்பாணக் கிளை - இல. 364, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

2016 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய நிதிசார் கூற்றுக்கள் தலைமைக் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளை உள்ளடக்குகின்றது. (ஒன்றாகச் சேர்த்து "குருப்" எனக் குறிப்பிடப்படுகின்றது).

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

**தலைமைக் கம்பனி**

இந்த ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகள் புதினப் பத்திரிகைகள், பருவ வெளியீடுகள் சஞ்சிகைகள் மற்றும் வர்த்தக அச்சிடல் தொடர்பான அச்சிடல் மற்றும் பிரசுரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. கம்பனி கொழும்பில் கூட்டுறவு தலைமையகத்தையும் அச்சிடல் பொறித் தொகுதிகளையும் கொண்டுள்ளதுடன், பிரதானமாக இலங்கையில் விற்பனை செய்கின்றது.

**துணைக் கம்பனிகள்**

இந்த ஆண்டில், துணைக்கம்பனிகளின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

அ) **லேக்ஹவுஸ் புரொபர்டி டெவலொப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட்**

அதன் முதலாவது முழுமையான உரித்துடைய துணைக் கம்பனி லேக்ஹவுஸ் புரொபர்டி டெவலொப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் சொத்து அபிவிருத்தி வியாபாரத்திற்கு மாற்றுகின்ற நோக்குடன் 1985இல் ஸ்தாபித்துள்ளது. ஆனால் இன்னும் செயற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை.

ஆ) **ஒப்சேர்வர் ஜொப்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (முன்னர் இன்போ மீடியா (பிரைவேட்) லிமிடெட் என அழைக்கப்பட்டது).**

2012ஆம் ஆண்டில் நாடு பூராகவும் துரிதமாக தகவல் மற்றும் அறிவை வழங்கக்கூடியதாக யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி புதினப் பத்திரிகைகளை அச்சிடுவதற்கு இன்போ மீடியா (பிரைவேட்) லிமிடெட் என்ற பெயரில் அதன் இரண்டாவது முழுமையான உரித்துடைய துணைக் கம்பனியை நிறுவியுள்ளது. 2016ஆம் ஆண்டில் கம்பனி உள்நாட்டிலும் சர்வதே ரீதியாகவும் ஸ்தாபனங்களுக்கு மனிதவள சேவைகள் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு கம்பனி அதன் பெயரை ஒப்சேர்வர் ஜொப்ஸ் பிரைவேட் லிமிடெட் என மாற்றம் செய்துள்ளது.

இ) **லேக்ஹவுஸ் கனெக்ட் (பிரைவேட்) லிமிடெட் (முன்னர் பிஸினஸ் லங்கா ஏஎன் (பிரைவேட்) லிமிடெட் என அழைக்கப்பட்டது.)**

மற்றுமோர் முழுமையான உரித்துடைய துணைக் கம்பனியாகிய பிஸினஸ் லங்கா ஏஎன் (பிரைவேட்) லிமிடட் 2012ஆம் ஆண்டின் பொழுது வியாபார சஞ்சிகை கைத்தொழிலுக்கு மாற்றுகின்ற நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஏஎன்சிஎல் மற்றும் கம்பனிக்கு வெளியே உள்ளக மற்றும் வெளிப்புற நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துகின்ற வியாபாரத்தை நடாத்துவதற்கு 2016ஆம் ஆண்டில் கம்பனி அதன் பெயரை லேக்ஹவுஸ் கனெக்ட் (பிரைவேட்) லிமிடெட் என மாற்றம் செய்துள்ளது.

# நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்

## 2. தயாரிப்பின் அடிப்படை

2016 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அத்துடன் அவ்வப்போது முடிவடைந்த ஆண்டுக்கான குரூப்பின் நிதிசார் நிலைமை பற்றிய கூற்று, பரவலான வருமானக் கூற்று சமநிலை மாற்றங்களின் கூற்று நிதி ஓட்டக்கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் ("நிதிசார் கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு ஸ்தூலப் பொருட்களுக்கான (இதன் பின்னர் "**SMEs**க்கான **SLFRS**" எனக் குறிப்பிடப்படும்) இலங்கை கணக்கியற் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எல்லா நிதிசார் தகவலும் இலங்கை ரூபாவில் அதாவது ஆயிரத்துக்குக் கிட்டிய சுற்றியுள்ள தொகைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 இணக்கப்பாட்டுக் கூற்று

குரூப்பின் திரட்டிய நிதிசார் கூற்றுக்கள் **SMEs**க்கான **SLFRS**க்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க இந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 அவதானத்துடன் செல்லல்

தொடர்ச்சியாக அவதானத்துடன் செல்லல் என்ற வகையில் பணிப்பாளர்கள் குரூப்பின் ஆற்றலை மதிப்பீடு செய்துள்ளனர். அத்துடன் அவர்கள் வியாபாரத்தைக் கலைப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு உத்தேசிக்கவில்லை.

## 3. திரட்டலின் அடிப்படை

திரட்டிய நிதிசார் கூற்றுக்கள் 2016 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு குரூப் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிதிசார் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது.

குரூப் கட்டுப்பாட்டைப் பெற்று தொடர்ந்து திரட்டப்படவுள்ள திகதியாகிய உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து அந்த கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதி வரை துணைக் கம்பனிகள் திரட்டப்படுகின்றன. துணைக் கம்பனிகளின் நிதிசார் கூற்றுக்கள் முரணற்ற கணக்கியற் கொள்கைகளைப் பயன்படுத்தி தலைமைக் கம்பனிகள் போன்று அதே காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்படுகின்றன.

குரூப் கம்பனிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தீர்க்கப்படாத இலாபங்களும் நட்டங்களும் நீக்கப்பட்டுள்ளன. குரூப் சொத்து விற்பனைகள் மீதான தீர்க்கப்படாத கட்டங்கள் திரட்டல்களுக்கு மாற்றப்படுகின்ற போது கீழே வைக்கப்படுகின்ற சொத்துக்களும் மதிப்புக் குறைப்புக்காக பரிசீலிக்கப்படுகின்றன. துணைக் கம்பனிகளின் நிதிசார் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டுள்ள தொகைகள் குரூப்பினால் சேர்க்கப்பட்டுள்ள கணக்கியற் கொள்கைகளுடன் ஒழுங்கான நிலைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான போது சீராக்கல் செய்யப்பட்டுள்ளது

## 4. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

#### 4.1 வெளிநாட்டு நாணய மாற்றம்

நிதிசார் கூற்றுக்கள் குரூப்பின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிக்கப்படுகின்ற நாணயமாகிய இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய விகிதத்திலே முதலில் குறிப்பிடப்படுகின்றன. வெளிநாட்டு நாணய மாற்றில் வகைப்படுத்தப்பட்ட நாணய மாற்று சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியன்று நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள மாற்றப்படுகின்றன. எல்லா வேறுபாடுகளும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணய மாற்றில் வரலாற்று ரீதியான செலவு விதிகளில் மதிப்பிடப்படுகின்ற நாணய மல்லாத விடயங்கள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்கள் திகதியன்று நாணய விகிதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் நியாய பெறுமதியில் மதிப்பிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள் நியாய பெறுமதி தீர்மானிக்கப்படுகின்ற போதுள்ள திகதியன்று நாணய விகிதங்களைப் பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

### 4.2 வரி விதிப்பு

#### நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை மற்றும் முன்னைய காலப்பகுதிக்கான நடைமுறை வருமான வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வரி விதிப்பு அதிகார வளங்களிலிருந்து அறவிடப்படவுள்ள அல்லது செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட தொகையில் மதிப்பிடப்படுகின்றன. ஐந்தொகைத் திகதியன்று வரி விகிதங்களும் வரிச் சட்டங்களும் உண்மையான தொகையைக் கணிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு மற்றும் இறைவரிச் சட்டத்தின் விதிகளுக்கமைய கணிப்பீடு செய்யப்பட்டு வருமானம் மற்றும் செலவின் கூற்றுக்களின் அடிப்படையிலே வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட வருமானம் அல்லது செலவின் பொருட்களுக்கு வழங்கக்கூடியதான மாற்றங்கள் தவிர ஏனைய பரவலான வருமானம் போன்றே ஏனைய பரவலான வருமானத்தில் நேரடியாக வரி வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### தாமதிக்கப்பட்ட வரி விதிப்பு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படையில் அறிவிக்கப்படுகின்ற திகதியில் தற்காலிக மாற்றங்களின் அடிப்படையிலும் நிதிசார் அறிக்கையிடல் நோக்கங்களுக்கான அவற்றின் எடுத்துச் செல்கின்ற தொகைகளின் அடிப்படையிலும் பொறுப்பு முறையைப் பயன்படுத்தி தாமதித்த வரி விதிப்பு வழங்கப்படுகின்றது. கணக்கியல் இலாபம் அல்லது வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தையோ தாக்கம் கொண்டிராத வேளையில் அத்துடன் வியாபார இணைப்பைக் கொண்டிராத கொடுக்கல் வாங்கலில் அல்லது சொத்துக்கள் பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து எழுகின்ற தாமதித்த வருமான வரி தவிர்ந்த எல்லா வரி விதிக்கப்பட்ட தற்காலிக மாற்றங்களுக்காக எல்லா வரி விதிப்புக்களும் தாமதிக்கப்பட்ட வருமான வரி பொறுப்புக்கள் எல்லா வருமான வரி பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்படுகின்றன.

தாமதமதிக்கப்பட்ட வரி சொத்துக்கள் எல்லா கழிக்கப்படத்தக்க தற்காலிக வேறுபாடுகள் முன் எடுத்துச் செல்லப்படுகின்ற பயன்படுத்தப்படாத வரி சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி கட்டங்கள் என்பவற்றை அங்கீகரிக்கின்றன. கொடுக்கல் வாங்கல்களில் அதாவது வியாபார இணைப்புடன் அல்லாத அத்துடன் கணக்கியல் இலாபம் அல்லது வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத அங்கீகரிக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்பிலிருந்து எழுகின்ற கழிக்கக்கூடியதான தற்காலிக மாற்றத்துடன் தொடர்புடைய தாமதித்த வருமான வரிச் சொத்துக்களில் கழிக்கக்கூடியதான தற்காலிக மாற்றங்களைக் குறிப்பிடுகின்றது. அத்துடன்;

தாமதித்த வருமான வரி சொத்துக்களின் எடுத்துச் செல்கின்ற தொகை ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியின் போதும் மீள் நோக்கப்படுவதுடன் பயன்படுத்தக்கூடியதான தாமதித்த வரி சொத்தின் எல்லாவற்றையும் அல்லது ஒரு பகுதியை அனுமதிக்கின்ற போதிய வரி விதிக்கத்தக்க இலாபத்திலிருந்து கழிக்கப்படுகின்றன.

அங்கீகரிக்கப்படாத தாமதித்த சொத்துக்கள் ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியின் போதும் மீள் மதிப்பிடப்படுகின்ற அத்துடன் அறவிடப்படவுள்ள தாமதித்த வரிச் சொத்துக்களையும் வருங்கால வரி விதிக்கத்தக்க இலாபங்களிலும் நேரிடக்கூடியதாக இருந்துள்ளது. வரி விகிதங்கள் மற்றும் அறிவிக்கப்படுகின்ற திகதியன்று தீர்க்கப்படுகின்ற அல்லது செலுத்தித் தீர்க்கின்ற கடன் பொறுப்புக்களும் தீர்க்கப்படுகின்ற போது எதிர்பார்க்கப்படுகின்ற விகிதத்தில் தாமதித்த வருமான வரி சொத்துக்களும் பொறுப்புக்களும் மதிப்பிடப்படுகின்றன.

சமநிலையில் நேரடியாக அங்கீகரிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பான தாமதித்த வருமான வரி சமநிலையில் வருமானக் கூற்றில் அல்ல அங்கீகரிக்கப்படுகின்றது.

**4.3 கடன் பெறுகை செலவுகள்**

உத்தேசிக்கப்பட்ட பாவனை அல்லது விற்பனைக்கு ஆயத்தப்படுத்துவதற்கான தேவையான காலப்பகுதிக்குரிய சொத்தை சுவீகரிப்பதற்கு நிர்மாணிப்பதற்கு அல்லது தயாரிப்புக்கு நேரடியாக வழங்கக்கூடியதான கடன் பெறுகை செலவுகள் சொத்துச் செலவின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படுகின்றன. ஏனைய எல்லா கடன் பெறுகை செலவுகளும் அவை சம்பவிக்கும் காலப்பகுதியில் செலவிடப்படுகின்றன. நிதியங்கள் பெற்றுக்கொள்ளப்படுவது தொடர்பாக நிகழ்கின்ற ஸ்தூலப் பொருட்கள் ஏனைய செலவுகள் வட்டியை உள்ளடக்குகின்றது.

**4.4 பெருட்பட்டியல்கள்**

உபயோகத்தில் இல்லாத அத்துடன் மெதுவாக நகர்கின்ற பொருட்களுக்காக கொடுக்க வேண்டிய அலவன்சுகளைச் செய்த பின்னர் குறைந்த செலவு மற்றும் நிகர தேறிய பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. பூர்த்தியடைகின்ற அத்துடன் விற்பனை செய்வதற்குத் தேவையான மதிப்பிடப்பட்ட செலவுகள் கழிக்கப்பட்டு சாதாரண வியாபாரம் காரணமாக விற்பனை செய்யக்கூடியதாகவுள்ள பொருட்பட்டியல்களின் விலையையே நிகர தேறிய பெறுமதி குறிப்பிடுகின்றது. முதலில் வருதல் முதலில் வெளிப்படுதல் அடிப்படையைப் பயன்படுத்தியே செலவு தீர்மானிக்கப்படுகின்றது. பொருட்பட்டியல்கள் ஒவ்வொரு அறிவிக்கப்படுகின்ற திகதியிலும் பெறுமதி குறைப்பிற்காக மதிப்பிடப்படுகின்றன. பொருட்பட்டியல் மீது மதிப்புக் குறைக்கப்படுகின்ற கட்டங்கள் இலாப நட்டத்தில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

**4.5 காசு மற்றும் காசுக்குச் சமனானவை**

காசு மற்றும் காசுக்குச் சமனானவை என்பது கையிலுள்ள காசு, கோரிக்கை வைப்புக்கள் மற்றும் குறுகிய தவணை உயர் திரவ முதலீடுகள் அறியப்பட்டுள்ள காசு தொகைகளுக்கு மாற்றப்படுவதற்கு ஆயத்த நிலையிலுள்ள அத்துடன் பெறுமதியில் முக்கிய மல்லாத இடர்பாட்டு மாற்றங்களுக்குரிய விடயத்தையும் உள்ளடக்குகின்றது.

நிதி ஓட்டக் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமனானவை, கையிலுள்ள காசு, தேறிய வங்கி வைப்புக்கள், நிலுவை வங்கி மேலதிகப் பற்று குறுகிய கால முதிர்வடைகின்ற அதாவது பெற்றுக்கொள்கின்ற திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

**4.6 சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

**செலவு**

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன செலவில் நாளாந்த சேவைகளின் செலவு தவிர்ந்த திரட்டிய பெறுமானத் தேய்வு கழித்து அத்துடன் பெறுமதியில் திரட்டிய மதிப்புக் குறைப்பு என்பவற்றிலும் குறிப்பிடப்படுகின்றன. அங்கீகரிக்கப்படுவதாயின், செலவிடப்படுகின்ற போது பொறித் தொகுதி மற்றும் உபகரணத்தின் பாகங்களைப் பதிலீடு செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

**பெறுமானத் தேய்வு**

சொத்து பொறித் தொகுதி மற்றும் உபகரணத்தின் கழித்து வந்து மிகுதியான பெறுமதியில் கழிக்கப்பட்ட செலவு மற்றும் நேர்கோட்டு அடிப்படையிலும் அங்கீகரிக்கப்படுகின்றன. சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பெறுமானத் தோய்வுக்காக கீழ்க்காணும் வருடாந்த விகிதங்கள் பயன்படுத்தடுப்படுகின்றன.

| | |
|---|---|
| பழைய கட்டடங்கள் | 25 ஆண்டுகள் |
| புதிய கட்டடங்கள் | 20 ஆண்டுகள் |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதி | 08 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 ஆண்டுகள் |
| தளபாடமும் இணைப்புக்களும் | 08 ஆண்டுகள் |
| கணனி மற்றும் பொருத்துதல்கள் | 04 ஆண்டுகள் |
| காற்றுச் சீராக்கிகள் | 04 ஆண்டுகள் |

சொத்தின் பெறுமானத் தேய்வு அது பயன்படுத்துவதற்குக் கிடைக்கின்ற போது ஆரம்பிக்கின்றது. சொத்து அங்கீகரிக்கப்படாத நிலைமை உருவாகின்ற போது முடிவடைகின்றது. முக்கியமான மாற்றங்கள் ஏதும் குறிப்பிடப்பட்டிருப்பின் சொத்தின் கழித்து வருகின்ற மிகுதியான பெறுமதி பயன்படுத்தும் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைகள் போன்றவை மீள் நோக்கப்படுகின்றன.

**தொழிற்படு மூலதனம்**

தொழிற்படு மூலதனம் செலவில் குறிப்பிடப்படுகின்றது. இவை நீண்ட தவணை மூலதனத்திட்டங்களின் நிருமாண வேலையில் நேரடியாக உள்ளக்குகின்ற மூலதன தன்மையான செலவுகளாகக் கருதப்படுகின்றன. மூலதன தன்மையான செலவினங்கள் திட்டங்கள் பூர்த்தியடைகின்ற வரை அத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் பயன்பாட்டுக்குக்கின்ற வரை மூலதன தன்மையான தொழிற்படு மூலதனமாக கணக்கிடப்படுகின்றன.

**அங்கீகாரமின்மை**

ஆரம்பத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த சொத்து பொறித் தொகுதி உபகரணம் விற்பனை செய்யப்படுகின்ற போது அல்லது எதிர்காலத்தில் பொருளாதார நன்மை கொண்டிராத போது அங்கீகாரமற்ற நிலைமையைக் கொண்டுள்ளது. சொத்தின் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத இலாபம் அல்லது நட்டம் ஏற்படுகின்ற போது (தேறிய விற்பனை நடைமுறை மற்றும் சொத்தின் எடுத்துச் செல்கின்ற தொகைக்கிடையிலான வேறுபாடு கணக்கிடப்படுதல்) சொத்து அங்காரமற்ற நிலமை அடைகின்ற போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

சொத்தின் உபயோக பெறுமானம், பிரயோக காலம் மற்றும் பொதுமானத் தேய்வு முறைமைகள் ஒவ்வொரு நிதியாண்டிலும் மீள் நோக்கப்படுவதுடன், பொருத்தமான முறையில் சீராக்கல் செய்யப்படுகின்றன.

**முதலீட்டு சொத்துக்கு மீள்வகைப்படுத்தல்**

உரிமையாளரால் உபயோகப்படுத்தப்பட்ட சொத்து முதலீட்டு சொத்தாக சொத்துக்களின் பிரயோகம் மாற்றமடைகின்ற போது இச்சொத்து முதலீட்டு சொத்துக்கு மீள் வகைப்படுத்தப்படுவதுடன், செலவில் குறிப்பிடப்படுகின்றது.

### 4.7 முதலீடு சொத்து

முதலீடு சொத்து வாடகை வருமானம் உழைக்கின்ற அல்லது மூலதன புகழாரத்திற்காக அல்லது இரண்டுக்கும் ஆனால் சாதாரண வியாபாரத்தில் விற்பனைக்கு அல்லாததாக இருக்குமிடத்து நிருவாக நோக்கங்களுக்காக உற்பத்தி அல்லது விநியோகம் அல்லது பொருட்களின் அல்லது சேவைகளின் உற்பத்தி அல்லது விநியோகத்தில் பயன்படுத்தப்படுகின்ற சொத்தாகக் கருதப்படுகின்றது.

முதலீடு சொத்து திரட்டிய பெறுமானத் தேய்வு கழித்து வருகின்ற செலவில் மற்றும் ஏதேனும் திரட்டிய மதிப்புக்குறைப்பு கட்டங்களின் செலவில் மதிப்பிடப்படுகின்றது. முதலீட்டு சொத்தின் சுவீகரிப்பு வழங்கக்கூடிய நேரடியான செலவை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட முதலீடு சொத்துக்களின் செலவு, பொருட்கள் மற்றும் நேரடியான தொழில் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பாவனை மற்றும் மூலதனமயமாக்கப்பட்ட கடன் பெறுகை செலவுகளுக்காக முதலீடு சொத்தை வேலை செய்கின்ற நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாக வழங்கக்கூடியதாகவுள்ள ஏனைய ஏதேனும் செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

முதலீடு சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்ற போது அல்லது முதலீடு சொத்து நிரந்தரமாக பாவனையிலிருந்து வாபஸ் பெறப்படுகின்ற போது அவை எதிர்கால பொருளாதார நன்மைகளைக் கொண்டிராத போது அங்கீகாரமற்ற நிலையைத் தோற்றுவிக்கின்றன. தேறிய விற்பனை இடம்பெறுகின்ற போது அத்துடன் சொத்தின் எடுத்துச் செல்கின்ற தொகை அங்கீகாரமற்ற காலப்பகுதியில் இலாப நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

முதலீட்டு சொத்திலிருந்து அல்லது அதற்கு செய்யப்படுகின்ற மாற்றங்கள் பாவனையில் மாற்றம் ஏற்படுகின்ற போது இடம்பெறுகின்றன. கணக்கீட்டு நோக்கங்களுக்காக செலவு எடுத்துச் செல்கின்ற பெறுமதியில் சொந்தச் சொத்திலிருந்து முதலீட்டு சொத்துக்கு மாற்றப்படுகின்ற போது எடுத்துச் செல்கின்ற பெறுமதியில் மாற்றம் ஏற்படுவதில்லை.

### 4.8 குத்தகைகள்

குரூப்பிற்குரிய குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்து உரிமைத்துவத்தின் எல்லா இடர்பாடுகள் மற்றும் வெகுமதிகள் கணிசமான அளவு மாற்றப்படுவதாயின் குத்தகை நிதிக் குத்தகையாக வகுக்கப்படுகின்றது. குத்தகையிடப்பட்ட சொத்தின் நியாய பெறுமதியில் குத்தகையின் தோற்றத்தில் இது தொடர்பான சொத்து அங்கீகரிக்கப்படுகின்றது. அல்லது குறைவதாயின் குத்தகை கொடுப்பனவு மற்றும் சடுதியான செலவுகளின் தற்போதைய பெறுமதி இவ்வாறே அங்கீகரிக்கப்படுகின்றது. ஓர் ஒத்திருக்கின்ற தொகை நிதி குத்தகை பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு முறைகள் மற்றும் உபயோக காலங்கள் குரூப்பினால் சட்ட ரீதியாக உரித்துடைமையாக்கப்பட்ட ஒப்பிடத்தக்க சொத்துக்களுக்குப் பொருத்தமான ஒத்திருக்கின்ற நிதிக் குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் நடாத்தப்படுகின்றன. குத்தகை கொடுப்பனவுகளின் வட்டி மூலகம் மூலதன நிலுவையாகவுள்ள மீதியை மாறுதலில்லாத எண் அளவு பகுதியெனப் பிரதிநிதிப்படுத்துவதற்குரிய அமுலில் உள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. அத்துடன் குத்தகை காலத்தின் மீதான இலாப நட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றது, ஏனைய எல்லா குத்தகைகளும் செயற்பாட்டு குத்தகைகளாகக் கருதப்படுகின்றன. செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கை தொடர்பான கொடுப்பனவுகள் குத்தகை தவணை மீதான நேர் கோட்டு அடிப்படையில் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது. பராமரிப்பு மற்றும் காப்புறுதி போன்ற இணைந்த செலவுகள் பாத்திரன் ஆக்கப்பட்ட செலவினங்களாகும்.

### 4.9 உருவமற்ற சொத்துக்கள்

பிரத்தியேகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட உருவமற்ற சொத்துக்கள் ஆரம்ப அங்கீகார செலவில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து உருவமற்ற சொத்துக்கள் திரட்டிய ஆரம்ப சொத்து பெறுமதி கழித்து ஏதேனும் கழித்து செலவில் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே திரட்டிய குறைமதிப்பு நட்டங்களும் கழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளக ரீதியாக பரவலாக்கப்பட்ட உருவமற்ற சொத்துக்கள் மூலதனமயமாக்கப்பட்ட அபிவிருத்தி செலவுகள் தவிர்ந்தவை. மூலதனமயமாக்கப்படுவதில்லை. அத்துடன் செலவிடப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஆண்டில் வருமானக் கூற்றில் பிரதிபலிக்கப்படுகின்றது.

எல்லைக்குட்பட்ட உபயோக காலத்துடன் உருவமற்ற சொத்துக்கள் உபயோகிக்கப்படுகின்ற பொருளாதார உபயோக காலத்தின் மீது ஆரம்ப சொத்து பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன. அத்துடன் உருவமற்ற சொத்துக்கள் மதிப்பு குறைப்புக்கள் செய்யப்படுகின்றது என மதிப்பு குறைப்புக்காக மதிப்பிடப்படுகின்றன. உபயோக காலத்துடன் உருவமற்ற சொத்துக்களுக்கான சொத்து மதிப்பு, மதிப்பு கழித்தல் காலம் மற்றும் சொத்து மதிப்பு கழித்தல் முறை குறைந்த பட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் கிடைக்கின்றது. சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட பிரயோக கால மாற்றங்கள் அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு விதம் பொருத்தமான முறையில் குறைமதிப்பு காலம் அல்லது முறை மாற்றமடைவதன் மூலம் கணக்கிடப்படுகின்றது. அத்துடன் கணக்கு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன உபயோக காலத்துடன் உருவமற்ற சொத்துக்கள் தொடர்பான குறைமதிப்பு செலவினங்கள் உருவமற்ற சொத்துக்களின் தொழிற்பாட்டுடன் திடமான செலவு வகையில் வருமானக் கூற்றில் செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### கணனி சொப்ட்வெயார்

கணனி சொப்ட்வெயார் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து 4 வருடங்களுக்கு மேல் குறைமதிப்பு செய்யப்படுகின்றது.

# நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்

## 4.10 நிதிசார் பத்திரம் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் விளைவு மதிப்பீடு

### 4.10.1 நிதிசார் சொத்துக்கள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவை மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமனானவை

இந்த நிதிசார் சொத்துக்கள் முதலில் கொடுக்கல் வாங்கல் விலையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இதன் விளைவாக அவை சாத்தியமான வட்டி முறையைப் பயன்படுத்தி மதிப்புக் குறைப்புக்காக ஒதுக்கத்தைக் கழித்து வருகின்ற சொத்து பெறுமதி கழித்தலில் மதிப்பிடப்படுகின்றன. விற்பனைகள் வழமையான கடன் தவணையில் இடம்பெறுகின்றன. அத்துடன் வியாபார பெற வேண்டியவை வட்டியைக் கொண்டிருப்பதில்லை. பொருள் ரீதியான சாட்சிகள் இருக்கின்ற போது கிடைக்க வேண்டிய எடுத்துச் செல்கின்ற தொகை பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. மதிப்புக் குறைப்பு நட்டம் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு வருடத்திற்கு மேல் நிலுவையாகவுள்ள வியாபார பெற வேண்டியவை முழுமையாக வழங்கப்படுகின்றன.

**நீண்ட தவணை நிதிசார் சொத்துக்கள்**

நீண்ட தவணை நிதிசார் சொத்துக்கள் சமநிலை பிணையில் முதலீடுகளை உள்ளடக்குகின்றது. அவை முதலில் கொடுக்கல் வாங்கல் விலையில் அங்கீகரிக்கப்படுகின்றன. பகிரங்கமாக வியாபாரத்தில் தொடர்புபட்ட சமநிலையில் முதலீடுகள் அல்லது உண்மையாக நியாய பெறுமதியில் மதிப்பிடவுள்ளவை, அங்கீகரிக்கப்பட்ட நியாய பெறுமதி மாற்றங்களுடன் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏனைய சமநிலை முதலீடுகள் ஏதேனும் பெறுமதி குறைவு கழித்து வருகின்ற செலவில் மதிப்பிடப்படுகின்றன.

### 4.10.2 நிதிசார் பொறுப்புக்கள்

குருப்பின் நிதிசார் பொறுப்புக்கள் கடன் பெறுகைகள் மற்றும் வியாபார அத்துடன் ஏனைய பெற வேண்டியவைகளையும் உள்ளடக்குகின்றது. நிதிசார் பொறுப்புக்கள் முதலில் கொடுக்கல் வாங்கல் விலையில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் அவை நடைமுறை வட்டி முறையைப் பயன்படுத்தி பெறுமதி குறைக்கப்பட்ட பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. வழமையான கடன் தவணையில் உள்ள வியாபார செலுத்த வேண்டியவை வட்டியைக் கொண்டிருப்பதில்லை.

## 4.11 பிந்திய - தொழில் வாய்ப்பு நன்மைகள், குறுகிய தவணை தொழில் வாய்ப்பு நலன்கள் மற்றும் முடிவடையும் நன்மைகள்

### 4.11.1 பிந்திய தொழில் வாய்ப்பு நன்மைகள்

**அ) அறியப்பட்டுள்ள கொடுப்பனவுத் திட்டங்கள் ஊ.சே.நிதி (EPF), ஊ. நம்பிக்கை நிதி (ETF)**

அறியப்பட்டுள்ள கொடுப்பனவுத் திட்டங்கள் (EPF, ETF) ஊடாக தொழில் வாய்ப்புக்கு பிந்திய நன்மைகளை குரூப் வழங்குகின்றது. இதன் கீழ் குரூப் சுயேச்சையான ஸ்தூல வஸ்துக்களுக்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துகின்றது. திட்டங்களுக்குரிய கொடுப்பனவுகள் இக்காலப்பகுதியில் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் ஏதேனும் செலுத்தப்படாத தொகைகள் நடைமுறைப் பொறுப்புக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**ஆ) அறியப்பட்டுள்ள நலன்புரி திட்டங்கள் (பணிக்கொடை)**

1983ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்ட இல. 12இன் கீழ் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைக்கான பொறுப்பு ஒரு சுயேச்சையான நம்பிக்கை நிதியம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் முழுமையாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் திட்டத்திற்கமைய சொந்தமாகச் செலுத்தித் தீர்ப்பதற்கு மேலதிக ஓய்வூதிய பணிக்கொடை சகல ஊழியர்களினதும் தொழிலுக்குச் சேர்க்கப்பட்ட ஆரம்பத்திலிருந்து கம்பனியின் கணக்குகளில் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. பணிக்கொடையின் பொறுப்பு SMEsக்கான SLFRS இன் பிரிவு 28இன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள எளிதாக்கப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டுள்ளது.

கம்பனியின் திட்டத்தின் கீழ் 2008 ஜூன் 05ஆம் திகதிக்கு முன்னர் சேர்ந்துள்ள ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவின் அடிப்படை பின்வருமாறு:-

| ஓய்வு பெறும்போதுள்ள சேவை ஆண்டுகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு சேவை ஆண்டுக்குமான வாராந்த சம்பளங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 25 ஆண்டுகளுக்கு மேல் | 6 |
| 20 - 25 ஆண்டுக்கு இடைப்பட்ட | 4 |
| 05 - 20 ஆண்டுகள் வரை | 3 |

கம்பனியின் திட்டத்தின் கீழ் 2008 ஜூன் 05ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் சேர்ந்துள்ள ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவின் அடிப்படை பின்வருமாறு:-

| ஓய்வு பெறும்போதுள்ள சேவை ஆண்டுகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு சேவை ஆண்டுக்குமான வாராந்த சம்பளங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 20 ஆண்டுகளுக்கு மேல் | 3 |
| 05 - 20 ஆண்டுகள் வரை | 2 |

### 4.11.2 குறுகிய தவணை ஊழியர் நலன்கள்

விடுமுறைகால தகுதி உட்பட குறுகிய தவணை ஊழியர் நன்மைகள் ''ஏனைய செலுத்த வேண்டியவைகளில்'' உட்படுத்தப்பட்டுள்ள நடைமுறைப் பொறுப்புக்களாகும். அத்துடன் கழிவுகளுக்கு உட்படாத தொகையில் மதிப்பிடப்படுகின்றன. பயன்படுத்தப்படாத தகுதியின் பெறுபேறாகச் செலுத்துவதற்கு குரூப் எதிர்பார்க்கின்றது.

### 4.11.3 முடிவின் போதுள்ள நன்மைகள் (VRS)

பாதிப்புக்குள்ளாகியுள்ள ஊழியர்களுக்கு முடிவடையச் செய்வதற்கான விபரமான வழக்கப்படியான திட்டத்தை கம்பனி அறிவிக்கின்ற போது முடிவடையச் செய்யும் நன்மைகள் ஒரு செலவினமாக அங்கீகரித்துள்ளதுடன் அறியப்படும் திகதியில் கொடுப்பனவுகளைச் செலுத்தி தீர்ப்பதற்குத் தேவையான மதிப்பிடப்பட்ட செலவில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 4.12 வருமான அங்கீகாரம்

விற்பனை வரிகள், தள்ளுபடிகள் மற்றும் வியாபார கழிவுகள் தவிர்ந்த குரூப்பினால் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வழங்கப்பட்ட சேவைகளுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட வேண்டிவற்றைக் கவனத்திற் கொண்டு நியாய பெறுமதிக்காக குரூப்பினால் வருமானம் மதிப்பிடப்படுகின்றது. தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற வரி, நிருவாகச் செலவுகளில் உட்படுத்தப்படுகின்றது.

### 4.12.1 பொருட்கள் விற்பனை (விநியோகம்)

புதினப் பத்திரிகைகள், பருவ வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகளையும் பத்திரிகை ஏஜென்டுகள், வீதி விற்பனையாளர்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் குரூப் அனுப்புகின்றது. பொருட்களின் சச்சரவு அற்ற விநியோககத்தை வாடிக்கையாளர்கள் எடுக்கின்ற போது வருமானம் அங்கீகரிக்கின்றது.

#### 4.12.2 சேவைகளை வழங்குதல் (விளம்பரம்)

குரூப் பல்வேறுபட்ட புதினப் பத்திரிகைகள், பருவ வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகளையும் பிரசுரிக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு பிரசுரத்தினதும் விளம்பர இடவசதியை விற்பனை செய்கின்றது. விளம்பர முற்பணக் கொடுப்பனவு தவிர, குறிப்பிடப்பட்ட பிரசுர வழங்கல் திகதியன்று வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 4.12.3 வாடகை வருமானம்

குத்தகையிடப்பட்ட சொத்துக்களிலிருந்து வாடகை வருமானம் சரியான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 4.12.4 வட்டி மற்றும் பங்கிலாப வருமானம்

நடைமுறை வட்டி முறையைப் பயன்படுத்தி திரட்டிய அடிப்படையில் வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. கொடுப்பனவு பெறப்படுகின்ற சரியான நேரத்தில் பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 4.12.5 ஏனையவை

ஏனைய வருமானம் திரட்டிய அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீது வருமான தன்மையான தேறிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வருமானக் கூற்றில் கணக்கிடப்படுகின்றது. அத்துடன் எடுத்துச் செல்கின்ற சொத்துக்கள் மற்றும் தொடர்புபட்ட விற்பனைச் செலவுகளும் விற்பனை செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்படுகின்றன.

பிரதான வருமான பரவலாக்கல் செய்யப்படுகின்ற செயற்பாடுகளுக்கான சடுதியான செயற்பாடுகளிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் சட்ட ரீதியானதல்லாத இதே மாதிரியான கொடுக்கல் வாங்கல்களின் குரூப்பினால் எழுகின்றவை தேறிய அடிப்படையில் ஒன்று சேர்க்கப்படுகின்றன அறிவிக்கப்படுகின்றன சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 5.1 முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியல் எண்ணக்கருக்கள், தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள்

குரூப் கணக்கியற் கொள்கைகள் பிரயோக செயற்பாட்டில் நிதிசார் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்ற தொகைகளில் பிரதிபலிப்பைச் செலுத்துகின்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பீடுகளைச் சார்ந்துள்ளவற்றிலிருந்து ஒரு பகுதியாக முகாமைத்துவம் தீர்வுகளைச் செய்யுமாறு வேண்டுகின்றது. மேலும் ஐந்தொகைத் திகதியில் நிச்சயமற்ற ஏனைய பிரதான மதிப்பீட்டு வளங்கள் மற்றும் எதிர்காலம் தொடர்பாக பிரதான எண்ணக்கருக்களை கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றது. கீழே கலந்துரையாடப்படுகின்ற அடுத்து வருகின்ற நிதி ஆண்டிற்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு எடுத்துச் செல்கின்ற தொகைக்கு பொருள் சீராக்கல்கள் காரணமாக முக்கியத்துவம் வாய்ந்த இடர்பாடுகளைக் கொண்டுள்ளது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் எடுத்துச் செல்கின்ற தொகை தொடர்பாக நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாக குறிப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய பிரதான விடயங்கள் கீழே கலந்துரையாடப்படுகின்றன.

**குத்தகைகள்**

ஆரம்ப திகதியில் பொருள் ரீதியான ஒழுங்கின் அடிப்படையில் குத்தகை ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவா அல்லது உள்ளடக்கப்படுகின்றதா குறிப்பிடப்பட்ட சொத்து அல்லது சொத்துக்களின் பயன்பாட்டைப் பொறுத்து அல்லது ஒழுங்குகளில் குறிப்பிட்ட உரிமை குறிப்பிடப்படாத போதும் சொத்து பாவனையின் உரிமையைத் தெரிவிக்கின்ற ஒழுங்கு குறித்து தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வாறே வெப்ப அனல் மின் சக்தி இயந்திர தொகுதிகளில் குரூப் சொத்துக்களின் உரிமைத்துவத்தின் இடர்பாடு மற்றும் நன்மைகள் அனைத்தையும் கணிசமான அளவு மாற்றாதவிடத்து அவை செயற்பாட்டு குத்தகைகளாக வகுக்கப்படுகின்றன. குத்தகை தொடர்பாக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக தீர்மானிக்கப்படுவதில் முக்கியமான நியாய தன்மையை குரூப் பின்பற்றுகின்ற பொழுது குத்தகை நிதிக் குத்தகையாக அல்லது செயற்பாட்டு குத்தகையாக வகுக்கப்படுகின்றது.

# நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்

**நிதிசார் பத்திரங்களின் நியாய பெறுமதி**

நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் நியாய பெறுமதி நிதிசார் நிலைமைக் கூற்றில் சுறுசுறுப்பான சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து, அவற்றின் நியாய பெறுமதி கழிக்கப்பட்ட காசு ஓட்ட மொடல் உட்பட பெறுமதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இந்த மொடல்களின் உள்ளீடு சாத்தியமான அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்து எடுக்கப்படுகின்றன. ஆனால் இது சாத்தியப்படாத நிலையில் நியாய பெறுமதியை நிறுவுவதில் ஓர் உயர்தர நியாயத் தீர்ப்பு அவசியப்படுகின்றது. நியாய தீர்ப்பு திரவ இடர்பாடு, கடன் இடர்பாடு மற்றும் ஸ்திரமற்ற நிலை போன்ற உள்ளீடுகளின் அவதானத்தையும் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் காரணிகள் ஆரம்பிப்பதிலுள்ள மாற்றங்கள் நிதிசார் பத்திரங்களின் அறிவிக்கப்பட்ட நியாய பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**நிதிசாரா சொத்துக்கள் மீது குறைமதிப்பு நட்டங்களின் மீள்நோக்கு**

குறைமதிப்பு மீள்நோக்கு ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் சொத்துக்கள் குறைமதிப்பு செய்யப்படுள்ளனவா என்பதை குரூப் தீர்மானிக்கின்றது. இது காசு பரவலாக்கல் பிரிவுகளின் “பாவனையில் பெறுமதி” மதிப்பீடு தேவைப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதி மதிப்பீடு காசு பரவலாக்கல் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதி ஓட்டத்தின் மதிப்பீடு ஒன்றைச் செய்யுமாறு முகாமைத்துவத்தை வேண்டிக்கொள்ளும் மேலும் சம்பந்தப்பட்ட நிதி ஓட்டத்தின் தற்போதைய பெறுமதியைக் கணிப்பீடு செய்யக்கூடிய வகையில் பொருத்தமான கழிவு விகிதத்தைத் தேர்ந்தெடுக்குமாறு வேண்டிக்கொள்ளும். அவை நிச்சயமற்ற தன்மையைக் கொண்டுள்ளதால் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதி ஓட்டம் மற்றும் கழிவு விகிதங்கள் குறித்த மதிப்பீடுகளைச் செய்யுமாறு குரூப்பை இந்த மதிப்பீடு வேண்டிக்கொள்கின்றது.

**வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை தொடர்பான குறைமதிப்பு நட்டங்கள்**

தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை அத்துடன் குறைமதிப்பு செய்ய வேண்டியதில்லை என அறியப்பட்டவை மற்றும் எல்லா முக்கியத்துவம் பெறாத தனிப்பட்ட பெறவேண்டியவை கூட்டாக மதிப்பிடப்படுகின்றன. குரூப்பின் சொத்துக்களில் இதே மாதிரியான இடர்பாடு குணாதிசயங்களுடன் கூடிய சொத்துக்கள் பொருள் ரீதியான சான்றுகள் இருந்த போதிலும் செலவிடப்பட்ட நட்டம் காரணமாக ஒதுக்கம் செய்யப்பட வேண்டுமா எனத் தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் அதன் தாக்கம் தொடர்பாக இன்னும் சான்றுகள் இல்லை. தரவு கணக்கிலிருந்து எடுக்கப்படுகின்ற கூட்டு மதிப்பீடு பெறவேண்டிய பக்கத்திலிருந்து (அதாவது நிலுவை மட்டங்கள், கடன் பயன்பாடு போன்றவையிலிருந்து) எடுக்கப்படுகின்றது. (வேலை வாய்ப்பற்ற மட்டங்கள், ஆதனம் விலைகள் நாடு இடர்பாடு மற்றும் பல்வேறு தனிப்பட்ட குழுக்களின் செயற்பாடு உட்பட) இடர்பாடுகள் மற்றும்பொருளாதார தரவுகளின் பிரதிபலிப்பு தொடர்பான நியாயத் தீர்ப்பு அவதானத்திற்கு எடுக்கப்படுகின்றன.

**வரிகள்**

குரூப் வருமான வரி மற்றும் VAT உட்பட ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும். நடைமுறை தாமதித்த மற்றும் ஏனைய வரிகள் நிதிசார் கூற்றுக்களில் SMEsக்கான SLFRS சேர்ப்புக்கள் தொடர்பான வரி வழிகாட்டல் விடயங்கள் முடிவு பெறாத நிலையிலுள்ள வரிகள் தொடர்பாகவும் மொத்த ஒதுக்கங்களைத் தீர்மானிக்கின்றது. வரிகள் உள்ளடக்கப்படாத நோக்கத்திற்காக வரி விதிக்கத்தக்க இலாபம் என்பனவும் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கின்ற வேளையில் பின்பற்றப்படுகின்ற பொருத்தமான வரிச் சட்டங்களின் மொழிபெயர்ப்பு தொடர்பாகவும் தீர்மானிக்கப்படுகின்றது.

குரூப் நடைமுறை, தாமதித்த மற்றும் மேலதிக வரிகள் நிலுவையாக இருக்கின்றதா என்பது தொடர்பான மதிப்பீடுகள் குறித்த ஏனைய வரிகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அங்கீகரிக்கின்றது. ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து இந்த விவகாரங்களின் இறுதி வரி வெளியீடு மாற்றமடைகின்ற போது இத்தகைய வேறுபாடுகள் தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வருமானம், தாமதித்த மற்றும் வரித் தொகைகளில் அழுத்தத்தைக் கொண்டிருக்கும்.

ஓரளவுக்கு பயன்படுத்தப்படாத வரி கட்டங்கள் பயன்படுத்தப்படாத நட்டங்களுக்கு முரணாக கிடைக்கின்ற வரி விதிக்கத்தக்க இலாபங்களுக்கு தாமதித்த வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. வருங்கால வரி திட்டமிடல் உபாயங்களுடன் சேர்த்து வருங்கால வரி விதிக்கத்தக்க இலாப மட்டங்கள் மற்றும் உரிய நேரத்தில் நிகழ்கின்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அங்கீகரிக்கப்படக்கூடிய தாமதித்த வரிச் சொத்து தொகைகளைத் தீர்மானிப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்த முகாமைத்துவ நியாய தீர்ப்பு தேவைப்படுகின்றது.

**சொத்து, இயந்திராதி மற்றும் உபகரணத்தின் பிரயோசனமான பயன்பாடு**

குரூப் ஒவ்வொரு அறிவிக்கின்ற திகதியன்றும் சொத்துக்களின் சொத்து மீதியாகவுள்ள பெறுமானங்கள், பிரயோசனமான பாவனை மற்றும் பெறுமானத் தேய்வு முறை என்பவற்றை மீள் நோக்குகின்றது. இந்த பெறுமானங்கள், விகிதங்கள், முறைமைகளை மதிப்பீடு செய்வதில் முகாமைத்துவத்தினால் நியாயத் தீர்ப்பு பின்பற்றப்படுகின்றது,

## 5.2 சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

குரூப்பின் சம்பந்தப்பட்ட தரப்பினர் துணைக் கம்பனிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்குகின்றது. கொடுக்கல் வாங்கல்கள் எந்தவொரு விஷேட விதிகள் நிபந்தனைகளை ஸ்தாபிக்கவோ அத்துடன் உத்தரவாதம் வழங்கப்படவோ அல்லது பெற்றுக்கொள்ளப்படவோ இல்லை. நிலுவையாகவுள்ள மீதிகள் உறுதியானதாக இருக்கவில்லை. அத்துடன் வழமையாக காசாக செலுத்தித் தீர்க்கப்படுகின்றன.

### 5.2.1 துணைக் கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள்

லேக்ஹவுஸ் புரொபர்டி டெவலொப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் துணைக் கம்பனி அதன் காணி மற்றும் காணி அபிவிருத்தி தொடர்பான செலவு ரூபா 3.8 மில்லியனை 2014ஆம் ஆண்டில் தலைமைக் கம்பனிக்கு மாற்றியுள்ளது. அத்துடன் தலைமைக் கம்பனி துணைக் கம்பனியிலிருந்து முன்னர் பெற்றுக்கொண்ட கடன் ரூபா 3.5 மில்லியன் தொடர்பாக ரூபா 0.42 மில்லியன் கடன் வட்டியைச் செலுத்தியுள்ளது. இந்த ஆண்டு பகுதியில் தலைமைக் கம்பனி வரிச் செலவினமாக ரூபா 0.176 மில்லியனைச் செலவிடப்பட்டுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கலுடன் 2016 டிசம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறு துணைக் கம்பனிக்கு மொத்தமாகச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 15.5 மில்லியனாக இருந்தது.

**இன்போ மீடியா (பிரைவேட்) லிமிடெட்/ ஒப்சேர்வர் ஜொப்ஸ் (பிரைவேட்) லிமிடட்**

2016 டிசம்பர் 31ஆம் திகதியன்று துணைக் கம்பனியால் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 5.7 மில்லியன் ஆகும்.

**பிஸினஸ் லங்கா ஏஎன் (பிரைவேட்) லிமிடட்/ லேக்ஹவுஸ் கனெக்ட் (பிரைவேட்) லிமிடட்**

ஐந்தொகைத் திகதியன்றுள்ளவாறு துணைக் கம்பனியின் சார்பாக செலவிடப்பட்ட அச்சிடல் செலவு, ஆசிரியர்பீட செலவு, நிகழ்ச்சி செலவு வரிகள் மற்றும் காகிதாதி செலவு தொடர்பாக துணைக் கம்பனியிலிருந்து ரூபா 17.2 மில்லியனைத் தலைமைக் கம்பனி பெறவேண்டியிருந்தது.

### 5.2.2 பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் கொடுக்கல் வாங்கல்கள்

குரூப்பின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் ஆவர். அவர்களது சம்பளங்கள் தொகை ரூபா 33.6 மில்லியன் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 23இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.3 சடுதியான பொறுப்புக்கள்**

கம்பனிக்கு எதிரான 31 வழக்குகள் நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கின்றன. ஒதுக்கங்களுக்கான விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான விபரங்கள் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 18இல் வெளியிடப்பட்டுள்ளன.

**5.4 ஒப்பீடுகள்**

கணக்கியற் கொள்கைகள் கம்பனியினால் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் SMEsக்கான SLFRSஇற்குத் தேவையானவை தவிர முன்னைய ஆண்டைப் போன்றே பின்பற்றப்பட்டுள்ளன. நடைமுறை ஆண்டின் சமர்ப்பிக்கப்பட்டவற்றை உறுதி செய்வதற்குத் தேவையான போது கடந்த ஆண்டின் தரவுகளும் வசன நடைகளும் மீள ஒழுங்கு செய்யப்பபட்டுள்ளன.

**5.5 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் சம்பவிக்கின்ற எல்லா பொருள் ரீதியான நிகழ்வுகளும் கணக்குகளுக்கான குறிப்பிட்ட குறிப்புக்களில் பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன. அல்லது வெளியிடப்பட்டுள்ளன என கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

# நிதிசார் கூற்றுக்கள் மீதான குறிப்புக்கள்

**குறிப்பு 06**

**6.1 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (கம்பனி)**

**செலவு**

| விடயம் | 1.1.2016இல் மிகுதி ரூபா'000 | 2016இல் சேர்ப்புக்கள் ரூபா'000 | 2016இல் வைப்புக்கள் ரூபா'000 | 2016இல் மாற்றங்கள் ரூபா'000 | 31.12.2016இல் மிகுதி ரூபா'000 |
|---|---|---|---|---|---|
| காணி | 3,830 | - | - | | 3,830 |
| கட்டடம் | 70,726 | - | - | (644) | 70,082 |
| கணனி மற்றும் நிர்மாணம் | 208,680 | 25,228 | - | | 233,908 |
| பொறி மற்றும் இயந்திராதி | 1,198,896 | 161,369 | (31,821) | (7) | 1,328,438 |
| மோட்டார் வாகனம் மற்றும் கராஜ் உபகரணம் | 78,316 | 14 | (7,616) | - | 70,715 |
| தளபாட இணைப்புக்கள் மற்றும் உபகரணம் | 34,321 | 1,958 | (1,000) | | 35,279 |
